"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி - 2023



இனிய
## தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

## OUR SERVICES:

- Accounting & Business Services
- Tax Consultancy
- Tax Investigation
- Locums & Umbrella Payroll
- Property Consultancy
- Mortgages
- Pension & Investment
- Insurance
- Will & Probate Services

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 · 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

---

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 31

# கலசம்
KALASAM

ஒலி 105

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# கோயிலைப் பேணுவோம்!

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்புவரை, இலங்கையில் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அதன் அருகில் ஓர் அர்ச்சகர் வீடு இருக்கும். அவர்கள் அந்தக் கோயிலில் தினசரி இரண்டுகாலமாவது அபிஷேகம் செய்து, நைவேத்தியம் வைத்துப் பூசை செய்து வந்தார்கள். மாலை நேரங்களில் முதியவர்கள் கோயிலின் முன்னால் கூடி, பலதும் பேசுவார்கள். அங்கே ஒரு சமூகக் கட்டமைப்பு இருந்தது.

நாட்டு நிலைமை மாறியதாலும், தொடர்ந்த மக்களின் இடப்பெயர்வுகளாலும் இந்தக் கட்டமைப்பும் மாறியது. கோயில்கள் சிதைந்தன; சிதைக்கப்பட்டன. மக்களும் வெளிநாடு செல்லத் தொடங்கினார்கள் அல்லது உள்நாட்டிலேயே வேறு ஊர்களுக்கு இடம் பெயர்ந்து வாழத் தொடங்கினார்கள். அர்ச்சகர்களும் சிலர் வெளிநாடுகளுக்குப் புறப்பட்டார்கள்.

இப்போது ஓரளவு அமைதி நிலவுவதால், சிதைந்த கோயில்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன. வெளிநாட்டில் வாழும் பலர் தத்தம் ஊரிலுள்ள கோயில்களைத் திருத்து கிறார்கள்; சிலர் புதிதாகப் பெரிய கோபுரங்கள்கூடக் கட்டுகிறார்கள்; அவ்வப்போது விடுமுறையில் ஊருக்குப் போய்ப் பல இலட்சம் செலவில் திருவிழாக்களும் செய்கிறார்கள். வருடத்தில் ஒருமுறை கோயில் பரபரப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் மீதி நாள்களில்?!

பல கோயில்களில் அர்ச்சகர் இல்லை. ஒரே அர்ச்சகர் பல கோயில்களுக்குப் போய்ப் பூசைகள் செய்யவேண்டிய நிலையைக் காணமுடிகிறது. அர்ச்சகர்கள் போதிய அளவில் இல்லாதிருப்பதையும் அவர்கள் வாழ்க்கை நடத்தப் போதிய வருமானம் இல்லாமையையும் காரணங்களாகக் கருதலாம். தினமும் வழிபாடு கோயிலில் நடக்கவில்லை என்றால் அந்தக் கோயிலுக்கு ஒரு கோபுரம் இருப்பதால் பயனில்லை.

கோயில்களைச் செப்பனிடும் வெளிநாடுவாழ் மக்கள் ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை வங்கியில் இட்டு அதன் வருமானத்தில் கோயிலை நடத்தக்கூடிய ஏற்பாடு செய்தால் - அர்ச்சகரை நிரந்தரமாகப் பணிக்கமர்த்தி, விளக்கேற்ற, நிவேதனம் செய்ய, அபிஷேக ஆராதனைகள் சிறிய அளவிலேனும் தினசரி நடக்க ஒழுங்கு செய்தால் - நாட்டில் நல்லவை நடக்கும் தினமும் காலையும், மாலையும் கோயில் மணியோசை காதில் விழும். மக்கள் மனதில் நல்ல சிந்தனைகள் உருவாகும்.

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| "யான் பெற்ற இன்பம்" | 03 |
| இரண்டு திருமணங்கள் - கந்தபுராணச் சிந்தனைகள் | 05 |
| கலசம் ஆசிரியருக்கு | 10 |
| திருச்செந்தூர் - பயணக் கட்டுரை | 11 |
| மகா சிவராத்திரி | 15 |
| சுட்ட மண்கல் பொன்னான அற்புதம் | 18 |
| "சிவனடியைச் சிந்தி நெஞ்சே" | 20 |
| பாஞ்சாலி சபதம் | 27 |
| தமிழ், சைவப் பாரம்பரியமும் விஞ்ஞானமும் | 30 |
| திருக்கார்த்திகை விரதம் | 32 |
| இராசன் வாத்தியார் | 35 |
| கேள்வி - பதில் | 40 |
| Manickavachakar | 43 |


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**

# "யான் பெற்ற இன்பம்"

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற் பசுபாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணுகிற் பாசம் நில்லாவே.

- திருமந்திரம்

பொழிப்புரை :-

பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களும் தோற்றம் இன்றி என்றும் உள்ள பொருள்களாகும். சரியை கிரியை போன்ற தவப்பெருக்கான் அன்றி பசு பதியினை நாடாது. தவத்தினாற் பக்குவப்பட்ட ஆன்மா இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம் ஆகிய நிலை பெற்று சிவன் அருளால் அவனிடம் தாடலைப்பட்டு உள்ளம் உருகி அன்புப் பெருக்கால் இன்புறும். அந்நிலை ஏற்பட்டதும் ஆன்மாவைப் பாசம் அணுகாது. சூரிய ஒளியின் முன் இருள் மறைந்து இருப்பது போல் ஆணவம் ஆன்மாவிலிருந்து விலகி இருக்கும்.

மேற்கூறிய திருமந்திரப் பாடலில் பாசம் என்ற பதத்தை ஆராய்ந்து பார்த்தால் எமக்கு பல உண்மைகள் புலப்படும். சைவ சித்தாந்தத்துக்கு உரையாணி என்று போற்றப்படும் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்ற நூல்களில் எவ்வாறு பாச இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

## தில்லையூரான்

பாசம் என்பது ஆணவம், கன்மம் (வினை), மாயை என்ற முக்கூற்று என்பது வெளிப்படை. சிவஞானபோதத்தில் வினை என்ற பகுதியில் இரண்டாம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் எல்லா ஆன்மாக்களுக்கும் இருவினைப்பயன் முதல்வன் ஆணையால் வரும் என்று கூறப்பட்டுள்ளது. வினை சடம், அறிவற்றது. அது தானாக ஆன்மாவைச் சென்று சேராது. ஆன்மா மலத்தினாற் பீடிக்கப்பட்டமையால் அதன் அறிவு சுதந்திரமாகச் செயற்பட மாட்டாது. எனவே பாரிசேட அளவையால் அளவிடற்கரிய சுதந்திர அறிவனாகிய முதல்வனே தன் ஆணையாகிய சிவசக்தி மூலம் இருவினைப்பயனையும் ஆன்மாவிற்கு சேர்ப்பிப்பன்.

இறைவனின் திரோதான சக்தியால் ஆன்மா இறைவனை நாடாது உலகியலை நாடி இருவினைப்பயனால் துன்பத்தை அநுபவிப்பதோடு, தானே கர்த்தா, தானே வினை முதல் என்று மயங்கி மேலும் ஆகாமிய வினையைப் பெருக்கி எஞ்சியுள்ள சஞ்சித வினையுடன் சேர்ந்து பிறவிச்சூழலில் அகப்பட்டு வருந்தும். எனவே பிறவி எடுத்த நாம் மேலும் பிறவி வராமல் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். அதற்கு வழியை வள்ளுவர் காட்டுகின்றார்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு" என்கின்றார்.

இறைவன் ஆணையால் நமக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டு மேலும் தீவினை செய்யாமல் இருக்க வேண்டும். அகங்காரத்தாலும் ஆணவச் செருக்காலும் மேலும் தீவினை செய்யாமல் பார்க்க வேண்டும். சிவஞான சித்தியாரில் ஒரு செய்யுளில்

கூறியுள்ள புத்திமதியை யாம் என்றும் கடைப்பிடித்து நடந்தால் விமோசனம் பெறலாம். அது:-

காண்பவன் சிவனே ஆனால் அவன் அடிக்கு அன்பு செய்கை
மாண்பு அறம் அரன்தன் பாதம் மறந்துசெய் அறங்களெல்லாம்
வீண் செயல் இறைவன் சொன்ன விதி அறம் விருப்பொன்றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்துகொள்ளே!

பொழிப்புரை :-
நாம் செய்யும் வினைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு அதற்குரிய பயன்களை அளிப்பவன் சிவன் ஆகையால் அவன் திருவடியை அன்பினால் வழிபடுதலே நல்லதோர் அறமாம். அவன் திருவடியை மறந்து செய்கின்ற அறங்கள் எல்லாம் வீண் செயலாகும். புண்ணியமாவது வேதாகமங்கள் இறைவனால் விதிக்கப்பட்ட விதிகளாகும். ஒன்றிலும் விருப்பிலனாகியும் உயிர்கள் மாட்டுக் கருணை கொண்டு விருப்பம் செய்கின்ற இறைவன் திருவடியை முக்கரணங்களாலும் பூசனை செய்ய வேண்டியது ஆன்மாவின் கடப்பாடாகும்.

குறிப்பு: -
சிவஞானபோதத்திலும் சிவஞான சித்தியாரிலும் இருவினை பற்றியும் அதன் பயன் பற்றியும் எடுத்தியம்பப்பெற்ற செய்யுள்கள் பலவாகும். இதனால் நாம் செய்யும் ஒவ்வொரு வினையையும் நன்கு சிந்தித்து ஆராய்ந்து செய்யவேண்டுமென்பதே எமக்குக் கடப்பாடாகும் என்பதைக் கூற விரும்புகின்றேன்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு நூலில் எழுதியிருந்தது ஞாபகத்திற்கு வருகிறது. “எவன் ஒருவன் திருவருட் குறிப்பை அறிய வேண்டிய வழியில் அறிந்து அதன்படி நடப்பவனே உண்மையான சமயி”.
கயறு சாத்திப் பார்ப்பதும் பூக்கட்டி வைத்துப் பார்ப்பதும் எங்கள் சமுதாயத்தில் காலம் காலமாக நடைபெற்று வருகிறது.

# புகழுடம்பு பொன்றாது

ஒருவனே இரண்டு யாக்கை
ஊன்பொதி யான நாற்ற
உருவமும் புகழுமாகும்
அதற்குள் நீ யின்ப முற்று
மருவிய யாக்கை இங்கே
மாய்ந்திடும் மற்றி யாக்கை
திறமதாய் உலகம் ஏத்தச்
சிறந்துபின் நிற்கு மன்றே.

ஒருவனுக்கு இரண்டு உடம்புகள் உள்ளன. அவை மாமிசத்தின் பொதியாகிய நாற்றமுடைய உடம்பு ஒன்று. மற்றையது புகழுடம்பு. அவ்விரு உடம்புகளில் ஒன்று கெடுதியான இன்பத்தை அநுபவித்திருப்பதால் அந்த ஊனுடம்பு இப்புவியில் அழிந்து விடும். ஆனால் மற்றைய உடம்பாகிய புகழுடம்போ உடல் அழிந்தாலும் உலகினரெல்லாம் போற்றும்படி நிலைத்து நிற்கும்.

**- விவேகசிந்தாமணி**

# இரண்டு திருமணங்கள்

## கந்தபுராணச் சிந்தனைகள்

திருமணங்கள் நிலைத்திருக்க இன்றியமையாத ஒன்றை வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார், "காதல் வாழ்விலே இருக்கின்ற இருவருக்கு ஒருவர் மீது மற்றையவர் காட்டும் அன்பு, உயிர்வாழ்கின்றவர்க்கு மேகம் மழைபெய்து காப்பாற்றுதலைப் போன்றது".

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி

சமகாலத்திலே நடக்கின்ற சைவத் தமிழ்த் திருமணங்கள் ஒன்றில் பெற்றோரால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அல்லது காதல் திருமணங்களாக அமைகின்றன. ஆனால் இந்த இரண்டு வகைத் திருமணங்களும் காலத்தின் சோதனைகளைத் தாங்குவதற்காக தேவையான அந்த, "வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி" உருவாக்கப்படல் வேண்டும். அல்லாவிடில் அத்திருமணம் நிலைக்காது. இதனை விளக்குவதற்காகத்தானோ என்னவோ முருகப்பெருமான் ஓர் ஒழுங்கு செய்த திருமணத்தையும் ஒரு காதற் திருமணத்தையும் புரிந்தார். ஒழுங்கு செய்து நடக்கும் திருமணத்திலே பெற்றோர் குறிப்பாக பெண்ணின் பெற்றோர் தம்முடைய குடியின் தன்மைக்கேற்ப

**Dr க சிவலோகநாதன்**

ஓர் ஆணைத் தேர்ந்தெடுத்து அவ்வாணினதும் அவருடைய பெற்றோர் உறவினரதும் சம்மதத்தைப் பெற்றுத் திருமண ஆயத்தங்களைச் செய்வர். நிச்சயதார்த்தம், நாள்குறித்தல், வீடு, வாசல், ஒழுங்கை, வீதி, கிராமம் என்பவற்றை அணி செய்தல், பெரியோர், பிரமுகர்களை அழைத்தல், சாமானியர்களுக்குக் கொண்டாட்டம் அமைத்தல், பெண்ணுக்கு வரனின் பெருமை கூறல், பெண்ணை அலங்கரித்தல், வரனுக்கு ஆரத்தி, கன்னிகாதானம், தாலி கட்டுதல், திருமணச் சடங்குகள், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல், மணமகனின் பெற்றோரின் ஆசி பெறுதல், மூத்தோரின் ஆசிகளைப் பெறுதல் என்பன இவ்வாறாக ஒழுங்கு செய்த திருமணங்களின் நிகழ்வுகள். இங்கே மணப்பெண் வரனின் குணாதிசயங்களுக்கேற்பத் தன்னை அமைத்துக் கொள்வதிலேயே "வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி" தங்கி இருக்கிறது. ஏனென்றல் இங்கே பெண்ணின் சம்மதம் பெரும்பாலும் பெறப்படுவதில்லை. முருகப்பெருமானுக்கும் தெய்வயானை அம்மையாருக்கும் நடந்த திருமணம் இவ்வகையைச் சார்ந்தது. இந்திரன், திருமால் ஆகியோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் இது. திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடன் முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலான பிரமுகர்களுக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. எம் முருகப்பெருமானுடைய பெரிய திருமணத்தைக் காணச் சாரி சாரியாகச் சாமானியர்கள் செல்கின்றனர். அவர்கள் இன்பங்களை அநுபவித்துச் செல்வதைக் கந்தபுராணம் மிகவும் விரிவாக விவரிக்கின்றது. திருமணச்சாலையிலே முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலான அரசர்கள், சூரியன், சந்திரன், திக்குப்பாலகர்கள் முதலிய கிரகங்கள், தேவர்கள் ஆகியோரும், முனிவர்கள், அந்தணர்கள் ஆகியோரும் கூடுகின்றனர். வரைவின்மகளிரும், தேவமகளிரும் இன்னும் பலரும் தெய்வயானை அம்மையாரைப் பணிந்து "தெய்வயானையே! கேள்! நீ சூரபத்மனுடைய உயிரைக் கவர்ந்த வேலாயுதராகிய ஆறுமுகக் கடவுளுக்கு மவியாகின்றாய், ஆதலினால் இவ்வுகிற்கு இறைவியாகின்றாய்" என்று சொல்கின்றனர்.

தெய்வயானை கேள் தீய சூருயிர்
வவ்விய வேலினான் மவைி ஆதியால்
எவ்வுலகிற்கு நீ இறைவியாமென
அவ்வவர் அடிபணிந்தன் பொடேத்தினார்

-தெய்வயானை திருமணப்படலம் 171

பிறகு அவர்கள் தெய்வயானை அம்மையாரை அலங்கரிகின்றனர். அதன்பின் முருகப்பெருமானைக் கூட்டமாகச் சென்று அழைத்து வருகின்றனர். அவருக்கு இந்திராணி பாலினால் கால் கழுவி ஆரத்தி எடுக்கின்றாள். அப்போது சிவபெருமானும் உமாதேவியாரும் வருகின்றனர். அவர்களை முருகப்பெருமான், இந்திரனாதியோர் வரவேற்கின்றனர். அவ்வுபசரிப்பை ஏற்று அவர் சபையின் நாயகனாக வீற்றிருக்கிறார். அப்பொழுது தெய்வயானை அம்மையாரை அழைத்து வருகின்றனர். அவர் சிவபெருமானை வணங்கியபின் முருகப் பெருமானை நோக்கி நாணமுறுகிறார். உமாதேவியார் அவருடைய முதுகைத் தடவிக்கொடுத்து முருகப்பெருமானுடன் இருத்திவைக்கின்றார். பிறகு திருமணச்சடங்கைப் பிரம்மதேவர் நடத்தி வைக்கின்றார். திருமணம் முடிந்தபின் முருகப்பெருமானும் தெய்வயானை அம்மையாரும் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்குகின்றனர். அவர்கள் ஆசி கூறி விடைபெறுகின்றனர். வந்தவர்களுக்கு விடைகொடுத்து முருகப்பெருமான் தெய்வயானை அம்மையாருடன் தன்னுடைய கோயிலுக்குள் சென்றார். வானுலகில் பிறந்த தெய்வயானையை மங்கலச் சூத்திரத்தால் கட்டி நகரில் கொண்டு வந்து நல்ல அணிகளை அணிந்து தோள் என்னும் தூணில் அன்பு என்னும் சங்கிலியால் பிணைத்தார்.

சேணுதித்திடு தெய்வதக் களிற்றினைச் செவ்வேள்
நாணிணிற் கட்டி நகரிடைத் தந்து நற்கலன்கள்
பூணுதற்றுறும் அங்குசங் கைக்கொடு புயமாம்
தூணுறப் பிணித் தணைத்தனன் அருளெனும் தொடரால்.

-தெய்வயானையம்மை திருமணப்படலம் 264

இவ்வாறாக முருகப்பெருமானால் “வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி” கொடுத்த முறை சொல்லப்பட்டது. எல்லோருடைய ஆசிர்வாதமும் இருந்தாலும் இந்த “வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி”தான் முக்கியமானதானக் கருதப்பட்டது.

இனி, இரண்டாவதான காதற் திருமணங்களிலே ஒரு பெண்ணை விரும்பிய ஆண் அப்பெண்ணை அடைகிறான். அவளுக்குப் பலவிதமான முகமன்களைக் கூறி அவளைச் சம்பாஷணைக்கு ஈர்க்கிறான். பெண் முதலிலே புறக்கணிக்கிறாள். ஆனால் விடாத ஆண் அவளை மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சம்பாஷணைக்கு இழுக்கிறான். பெண் சற்றுக் கனிவடைகிறாள்.

ஆணின் வல்லமையை அறிகிறாள். காதல் தோன்றுகிறது. விடயம் பெண் பகுதியாருக்கு மெல்ல மெல்லத் தெரியவருகிறது. பலத்த எதிர்ப்புக் கிளம்புகிறது. சிலர் பெண்ணை ஆதரிக்கிறார்கள். ஏதோ ஒரு வகையில் திருமணம் நடைபெறுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான அந்த “வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி” கிடைக்கிறது. அவர்களின் வல்லமையினாலே, முயற்சியினாலே எல்லோருடனும் சமரசம் ஏற்படுகிறது. முருகப்பெருமானுக்கும் வள்ளி நாயகியாருக்கும் இடையே நடந்த இந்தத் திருமணம் இந்த வகையைச் சேர்ந்தது.

முருகப்பெருமான் தினைப்புனத்தைக் காவல் செய்துகொண்டிருந்த வள்ளிநாயகியாரிடம் மானுடராகப் போகின்றார். முருகன், "வாட்படையைப் போன்ற விழிகளையுடைய பெண்ணே கேட்பாயாக! அணியக்கூடிய அணிகலன்களை அணிந்த மகளிர்குலம் அனைத்துக்கும் தலைவியாய், இம்மண்ணுலகத்தில் இருக்கும் உன்னை, தினைப்புனத்தைக் காக்க வைத்துவிட்டுச் சென்றனர் அந்த வேடுவர்கள். அவர்களுக்கு தக்கது எது, தகாதது எது என்பதை ஆராய்ந்து முடிவுசெய்யும் அறிவைப் பிரம்மன் படைக்கவில்லைப் போலும்" என்றார்.

நாந்தக மனைய உண்கண் மங்கைகேள் ஞாலந் தன்னில்
ஏந்திழை யார்கட் கெல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப் போயினர் புளிஞரானோர்க்
காய்ந்திடும் உணர்ச்சி யொன்றும் அயன் படைத்திலன் கொல் என்றான்
-வள்ளியம்மை திருமணப்படலம் 70

இவ்வறாகப் பலமுகமன்களை முருகப்பெருமான் சொல்கிறார். வள்ளிநாயகியார் வாய் திறக்கவில்லை. "பெண்ணே நீ ஏதேனும் ஒரு சொல்லைச் சொல் அல்லது ஒரு புன்னகையைச் செய். அல்லது ஒரு கடைக்கண் பார்வையையாவது செய்" என்று கேட்கிறார். அந்த நேரத்திலே வள்ளிநாயகியின் தந்தையான நம்பிராசன் திடீரென்று அங்கே வருகிறான். முருகப்பெருமான் ஒரு வேங்கை மரமாகி நிற்கின்றார். நம்பிராசன் போய்விடுகின்றான். வேங்கைமரமாகி நின்ற முருகப்பெருமான் மீண்டும் மானுட உருவங்கொண்டு தொடர்ந்து வள்ளிநாயகியாரிடம் இரங்குகின்றார். தன்னோடு வரும்படி அழைக்கின்றார். "தேவர் உலகில் உள்ள கொடிபோன்ற அரம்பையர் அனைவரும் உன்னை வணங்கி வாழ்த்துமாறு வாழ்வு தருவேன்" என்று கூறுகிறார். வள்ளிநாயகியார், இவருடைய இயல்பு நன்றாக உள்ளது என வெட்கமடைந்தார். "நீங்கள் உலகைக் காப்பவர். நான் தினைப்புனத்தைக் காப்பவள். நீங்கள் என்மீது ஆசை வைப்பது தகுதியாகாது. புலி பசி எடுத்தாலும் புல்லைத் தின்னாது" எனக் கூறினார். இவ்வாறு நடக்கையிலே நம்பிராசன் மீண்டும் திடீரென வருகிறார். முன்னர் வந்தபோது கலங்காத வள்ளி நாயகி கலங்குகிறாள். "வேடுவர்கள் பொல்லாதவர்கள். இங்கே நிற்காது விரைவாக ஓடித்தப்புங்கள்" என்று சொல்கிறாள். அங்கு நின்ற முருகப்பெருமான் வள்ளிநாயகி "இனி இங்கிருந்து விரைவாக ஓடும்" என்று சொன்ன சொல்லைக் கேட்டு மிகவும் மகிழ்வெய்தி சைவநெறி கைவந்த தவத்தவர் கோலங்கொண்டு எதிரே வந்த வேடர்களை எதிர்கொண்டு வாழ்த்தினார். நம்பிராசன் அவர் வந்த காரணம் என்ன என்று கேட்கிறான். அதற்கு அவர் தன்னுடைய மூப்புத்தன்மை நீங்கவும் மனமயக்கம் நீங்கவும் அவனுடைய மலையில் குமரியில் ஆட விரும்பி வந்தேன் எனக்கூறுகிறார். அவ்வாறே செய்யுமாறு கூறி வள்ளிநாயகியாருக்குத் துணையாகவும் அவரை அமர்த்திவிட்டு நம்பிராசன் சென்றுவிடுகிறான். நம்பிராசன் சென்றபிறகு வயோதிபர் தனக்குப் பசிக்கிறது என்று சொல்ல வள்ளிநாயகியார் அவருக்குத் தேனையும் பழங்களையும் தினைமாவையும் கொடுக்கிறார். உட்கொண்ட முருகப்பெருமான் தனக்குத் தாகம் எடுக்கிறது என்றார். அதற்கு வள்ளிநாயகியார் ஏழு மலைகளுக்கு அப்பாலுள்ள சுனைக்குச் சென்று தாகசாந்தி செய்து கொண்டு வரும்படி சொல்கிறாள். முருகப்பெருமான் அவளையும் துணைக்கு வரும்படி அழைக்கிறார். வள்ளிநாயகியுடன் சென்று தாகசாந்தி செய்த முருகப்பெருமான் வள்ளிநாயகியைப் பார்த்து பின்வருமாறு சொல்கிறார்,

"மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய மென்மையான இயல்புடையவளே! உடலை வருத்தும் பசியைப் போக்கினாய், தாகத்தையும் தீர்த்தாய், இன்னும் என் தளர்ச்சி நீங்கவில்லை என் மோகத்தைத் தணிப்பாயாயின் என் மனக்குறை முடிந்ததாகும்".

ஆகத்தை வருத்துகின்ற அரும்பசி அவித்தாய் தெண்ணீர்த்
தாகத்தை அவித்தாய் இன்னும் தவிர்ந்தில தளர்ச்சி மன்னோ
மேகத்தை யனைய கூந்தல் மெல்லியல் வினையேன் கொண்ட
மோகத்தைத் தணித்தியாயின் முடிந்ததென் குறையதென்றான்.

\- *வள்ளியம்மை திருமணப்படலம் 104*

இதைக்கேட்ட வள்ளிநாயகியார் சிரித்துப் பெருமூச்சவிட்டு, சினந்து நடுங்கிச் சொல்லலானார். “மேன்மையுடைய தவக்கோலத்தைக் கொண்டு இப்போது அவ்வேடத்திற்குப் பொருத்த மில்லாதவற்றை உரைத்தீர். வேடர் உம்முடைய இத்தகாத செயலை அறிவாராயின், அது இருவருக்கும் தீமையாக முடியும். இவ்வாறு நீர் கேட்டதனால் வேடர்குலத்தவருக்கு தீராத ஒரு பழியைச் செய்தீர். நான் தினைப்புனத்தைக் காக்கப் போகிறேன்” என்று சொல்லிவிட்டு வேகமாக முன்னே சென்றார். முருகப்பெருமான் தன் தமையனான விநாயப்பெருமாளை நினைக்கிறார். விநாயகப்பெருமான் ஒரு பெரிய யானையின் வடிவங்கொண்டு கடல்போல் முழக்கம் செய்து கொண்டு வள்ளிநாயகின் எதிரே சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்தார். யானையைக் கண்டவுடன் வள்ளிநாயகியார் அச்சத்துடன் மீண்டும் வந்து முருகப்பெருமானைப் பார்த்து, “அடிகளே இங்கே வந்து கொண்டிருக்கின்ற இந்த யானையிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்! நான் உங்கள் சொற்படி நடக்கிறேன்” என்று கூறி முருகப்பெருமானின் பின்புறத்தைத் தழுவிக் கொண்டார். முருகப்பெருமானின் வேண்டுதலின்படி யானை போய் விடுகிறது. முருகப்பெருமான் வள்ளிநாயகியாரைக்கூடி அவருக்குத்தம் பழைய பெருவடிவையுங் காட்டினார்.

என்னும் அளவில் இனிதென்றி யானைமுக
முன்னிளவல் ஏகமுகமாறுடைய பிரான்
கன்னிதனை யோர் கடிகாவினிற் கலந்து
துன்னு கருணை செய்து தொல்லுருவம் காட்டினனே.

\-*வள்ளியம்மை திருமணப் படலம் 115*

வள்ளிநாயகியார் முருகப்பெருமானின் திருக்கோலத்தைக் கண்டு தரிசித்து வணங்கித் துடித்து பதைபதைத்து நடுங்கிக் கைகளைக் குவித்து தம்குற்றம் எல்லாவற்றையும் பொறுத்து, தன்னை ஆட்கொள்ளுமாறு வேண்டுகிறார். முருகப்பெருமான் அவருக்கு முற்பிறப்பிலே திருமாலின் மகளாகப் பிறந்து தன்னை அடையத் தவம் செய்த திறத்தாலேயே தாம் அவளை அணைத்ததாகச் சொல்லி மீண்டும் தழுவிக் கொண்டார். பின்னர் வள்ளிநாயகியாரைத் தினைப்புனத்திற்குச் செல்லுமாறு சொல்கிறார். வள்ளிநாயகியார் தினைப்புனத்திலிருக்க, அவளுடைய தோழி இகுளை என்பாள் அயற் தினைப்புனத்திலிருந்து வருகிறாள். இயற்கையாய் அமைந்த மணமும், தோற்றமும், உலகம் புகழும் ஒழுக்கமும், சொல்லும் செயலும், நினைவும் எஞ்சிய யாவும் வேறுபட்டிருப்பதைக் கண்டு இதற்குக் காரணம் யாது என்று சிந்தித்துத் தெளிவு வேண்டித் தோழியான வள்ளிநாயகியாரைக் கேட்கிறாள்.

நாற்றமும் தோற்றமும் நவிலொழுக்கமும்
மாற்றமும் செய்கையும் மனமும் மற்றதும்
வேற்றுமை யாதலும் விளைவு நோக்கியே
தேற்றமொ டிகுளையங் கினைய செப்புவாள்.

\-*வள்ளியம்மை திருமணப்படலம்122*

இவ்வாறு கேட்ட தோழிக்குப் பிறகு விடயம் புரிகிறது. முருகப்பெருமான் மீண்டும் வள்ளி நாயகியாரைச் சேர அவள் உதவி செய்கிறாள். இதன் பிறகு தினை முற்றி அறுவடைக்கு ஆயத்தமாகிறது. வள்ளிநாயகியார் வீட்டுக்குச் செல்கிறார். அவரைத் தேடி முருகப்பெருமான் வேடுவர் குறிச்சிக்குச் செல்கிறார். இதற்கு முன்னரே வள்ளிநாயகியாரிடம் ஏற்பட்ட மாற்றங்களை அவதானித்த தாயார் அவரைக் கடும் கண்காணிப்பில் வைத்திருக்கிறார். இரவிலே சென்ற முருகப்பெருமான் வள்ளிநாயகியின் தோழியாகிய இகுளையைச் சந்திக்கிறார். இகுளையின் உதவியோடு அவர் வள்ளிநாயகியாரை அழைத்துக்கொண்டு அயலிலிருந்த சோலைக்குள் செல்கிறார். விடியற்காலையிலே மகளைக் காணாத தாயாகிய கொடிச்சி, நிகழ்வை நம்பிராசனுக்கு அறிவிக்கிறாள். வேடுவர்களுடைய சோலையை முற்றுகையிட்ட நம்பிராசன் அம்புகளைச் சரமாரியாக முருகப்பெருமான்மீது விடுகிறார். வள்ளிநாயகியாரால் சகிக்க முடியவில்லை. "வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி" வேலை செய்கிறது. வேடர்களைக் கொலைசெய்யுமாறு முருகப்பெருமானை வேண்டுகிறார். முருகப்பெருமானின் சேவல் கூவியதும் வேடுவர்கள் இறந்து விடுகிறார்கள். முருகப்பெருமான் தம்மவர்க்காகத் துயருறும் வள்ளி நாயகியாரை அழைத்துக் கொண்டு செல்கிறார். வழியிலே நாரத மாகாமுனி வருகிறார். நிகழ்ந்தவற்றைக் கேட்கிறார். பெற்று வளர்த்த தந்தையையும் உறவினரையும் இறக்க விடுதல் பிழையெனச் சொல்ல, முருகப்பெருமான் அதைச் சரியென ஏற்று மீண்டும் வருகிறார். வள்ளி நாயகியார் மூலம் எல்லோரையும் உயிர்ப்பிக்கின்றார். எல்லோரும் பகை நீங்கி முருகப்பெருமானை வணங்கி ஊரில் வந்து திருமணஞ் செய்யுமாறு விண்ணப்பிக்கின்றனர். ஊரிலே அவசரம் அவசரமாகத் திருமணம் நடைபெறுகிறது. முருகப்பெருமானால் வள்ளிநாயகி முழுத்தெய்வக்கோலமடைகிறார். அந்த நேரத்தில் நம்பிராசன் வள்ளிநாயகியாரின் கையை முருகப்பெருமானின் கரத்திலே வைத்து தாரைவார்த்து கன்னிகாதானம் செய்கிறார்.

அந்தநல் வேளைதன்னில் அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணிதன்னில் கன்னிகை கரத்தை நல்கி
நந்தவ மாகிவந்த நங்கையை நயப்பால் இன்று
தந்தனன் கொள்கவென்று தண்புணல் தாரை உய்த்தான்
-வள்ளியம்மை திருமணப்படலம் 199


அதற்குப்பிறகு பிரமாதி தேவர்கள் சூழ, சிவபெருமான் பார்வதி முன்னிலையிலே திருமணச்சடங்கு நடைபெறுகிறது.. முருகப்பெருமான் வள்ளிநாயகியாருடன் தணிகை மலைக்குச் செல்கின்றார். இவ்வாறாக இரண்டு வகையான திருமணங்களைக் கந்தபுராணம் சொல்கிறது. அவ்விரண்டிலுமே "வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி" யான பரஸ்பர அன்பே முக்கியமான சைவகலாசார இயல்பாகக் காட்டப்படுகிறது.



# கலசம் ஆசிரியருக்கு....

**- தவம்**

## 103 ஆவது இதழ் பற்றிய பார்வை




சிவகாமசுந்தரி அம்பாள் உடனாய சிதம்பரேசுவரர் கோயிலின் தேர்ப்பவனி முதன்முதல் ஆலயத்துக்கு வெளியிலே வீதியில் நடைபெற்ற அன்று, கலசம் 103ஆவது இதழ் வெளியானது. அவ்விதழ் அருமையான பல கட்டுரைகளைத் தாங்கி வந்தது. அதற்கு மகுடம் சூட்டினாற்போல ராஜகவியின் கவிதை அமைந்திருந்தது.

ஒவ்வொரு இதழிலும் கலசம் ஆசிரியர் புதுவிதமான கருத்தை தமது தலையங்கத்தில் வைப்பது வழக்கம். அதற்கமைய இந்தமுறை "மாறிவரும் இசை மரபு"களைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அது மிகவும் உண்மையே!

இலண்டன் மகாலட்சுமி கோயிலில் இசைஞானம் மிக்க ஒருவர் நாதஸ்வரம் வாசித்துவருகிறார். ஆரம்பத்தில், 'என்ன இவர் புதுவிதமாக ஏதேதோ வாசிக்கிறாரே!' என்று யோசித்துக்கொள்வேன். வழக்கமாக மற்றவர்கள் வாசிக்கும் பிரபலமான பாடல்களை அவர் வாசிப்பதில்லை. ஆனால் அவை எனக்குப் புரியும் உருப்படிகள் என்பதால் நான் அவற்றை இரசிப்பேன். இவர் வாசிப்பது ஏதோ இராகம் வாசிக்கிறார் என்பது மட்டும் புரியும், இசையும் இசைவாக இருக்கும். ஒருநாள் அவரிடமே அதைப்பற்றி நான் கேட்டேன். அதற்கு அவர், காலையில் பூபாளம் இராகத்தில் ஆரம்பிப்பது என்றும் பின்னர் நண்பகல், மாலை என்று வெவ்வேறு இராகங்கள் வாசிக்கப்படும் என்றும் சொன்னார். அது தவிர, அபிஷேகம், சுவாமி புறப்பாடு என்று ஒவ்வொரு நிகழ்வுக்கும் வாசிப்பதற்கு ஒரு ஒழுங்கு இருக்கிறது என்றும் சொன்னார். அந்த மரபுப்படியே தான் வாசிப்பதாகவும் சொன்னார். கலசம் ஆசிரியரின் கருத்ததை வலியுறுத்துவதுபோல அவரின் பதில் அமைந்தது.

"பசி" அருமையான கட்டுரை. சுருக்கமாகத் தெளிவாக, இரசிக்கக்கூடியதாக இருந்தது.

"அருகிவரும் கலைகள்" என்ற கட்டுரையில் கலை என்றால் என்ன, அவற்றின் பல கூறுகள் எவை, கலை பற்றிய விளக்கம் என்பவை தெளிவாக எழுதப்பட்டிருந்தன. கலையின் பயன்பாடு, அதைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியம் என்பவற்றையும் கட்டுரை ஆசிரியர் விவரமாக விளக்கியுள்ளார். அது ஒரு பூரணத்துவமான கட்டுரை. நீண்ட கட்டுரையாக இருந்ததனால் இரண்டு பகுதிகளாகப் போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

பாஞ்சாலி சபதம் தொடர் கட்டுரையும் சிறப்பாக வந்துகொண்டிருக்கிறது. பாரதியாரின் கவிதை நயம் ஆங்காங்கே சுவைக்கப்படுகின்றது.

சுருக்கமாகக் கூறினால், முதற் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம்வரை ஆன்மிக, அறிவு வளர்ச்சிக்கு அருமையான விடயங்கள் அந்த இதழில் பிரசுரமாகியிருந்தன. இந்த இதழை வாசிப்பவர்கள் பாக்கியசாலிகள்.




திருச்செந்தூர் நெல்லை மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியைச் சேர்ந்தது. 2000 - 3000 ஆண்டுகள் பழமை கொண்ட திருச்செந்தூரைச் சங்க இலக்கியத்தில் தொல்காப்பியம், புறநானூறு, சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் என்றால் முருகன்தான் முன் நிற்பார். செந்தூரனின் ஆலயம், ஆறுபடை வீடுகளில் இரண்டாவதாக இருக்கிறது. இத்தலம் மாத்திரம் ஏனைய வீடுகளைப் போலன்றி கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. சமுத்திரத்திலிருந்து கொந்தளித்து வரும் அலைகள், முருகன் சந்நிதியை அடைந்து தானாகவே அடங்குவது போல் எமது துன்பங்களும், துயரங்களும் இத்தலத்தைத் தரிசிப்பதால் நீங்கும் என அநுபவரீதியாகக் கூறப்படுகிறது. அலைகளால் அணைக்கப்படுவதால் அலைவாய் எனும் சிறப்புப்பெயர் பெற்று, பின்னர் திரு என்ற அடைமொழி யோடு திருச்சீரலைவாய் என வழங்கப்படுகிறது. சூரனை வென்றதால் ஜெயந்திநாதர் என்ற பெயர் பின்னர் மருவி செந்திநாதர் என்றாகி, செந்திநாதர் தலம் “ திருஜெயந்திபுரம்” என்றாகி ஈற்றில் திருச்செந்தூர் என்றானது. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி பேரழிவைக் கொடுத்த சுனாமியால் கடலோரத்தில் இருந்தும் இவ் ஆலயம் யாவித சேதமும் அடையாதது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரியூர் DR க.கதிர்காமநாதன்

வரலாறு:-

1646 -1648 இல் டச்சுக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, வசிப்பிடமாகவும் அமைந்த ஆலயம். இவர்கள் நீங்கும் போது செம்பால் அமைக்கப்பட்ட இரண்டு உற்சவ மூர்த்திகளைப் பொன் எனக் கருதி எடுத்துச் சென்றனர். கடலில் பிரயாணம் செய்யும் போது சூறாவளிக் காற்றில் அகப்பட்டுத் திணறினர், அதனால் பயந்து கடலின் நடுவே விக்கிரகங்களை எறிந்தனர். உடனே சூறாவளி அடங்கியது. 5 வருடங்கள் கழிந்த பின்னர் முருகன், வடமலை அப்பா பிள்ளை என்ற ஒரு சிறந்த முருக பக்தரின் கனவில் தோன்றி, அவ்விடத்தைக் காட்டினார். 1653ம் ஆண்டில் அவரால் சிலைகள் எடுக்கப்பட்டன. இவ்வரலாற்றை ஓவியங்களாக ஆலயத்தின் உட்பகுதியில் காணலாம்.

சிக்கிலிலே வேல் வாங்கி, செந்தூரிலே வேல் தாங்கி, சூரனைப் படைகளோடு சங்காரம் செய்து ஆட்கொண்ட இடம் திருச்செந்தூர். இதனால் தேவர்களைச் சிறை மீட்டு அவர்களின் வழிபாட்டையும் செந்தில் ஆண்டவன் ஏற்றுக் கொண்டான் என திருத்தலவரலாறு கூறுகிறது.

குமரகுருபரர் :-

5 வயதுவரை பேச இயலாமல் இருந்தவரைப் பேசவைத்து, பின்னால் அவரைக் கந்தர் கலிவெண்பா பாடவைத்ததும் திருச்செந்தூர் முருகன் திருவருளே. காசநோயால் அவதிப்பட்ட ஆதிசங்கரர் இந்த ஆலயத்தை அடைந்து ஆதிசேஷன் முருகனை வழிபடும் காட்சியைக் கண்டதும் சுப்பிரமணிய புஜங்கம் எனும் பதிகத்தைப் பாடிப் பிணி தீர்த்ததும் திருச்சீரலைவாய்ப் பெருமான் திருவருளே. பலரும், ஏன் நாமும் பயனடைந்தோம்.

மூலவர்: சுப்பிரமணிய சுவாமி
உற்சவர்: சண்முகர், ஜெயந்திநாதர், குமரவிடங்கன், அலைவாய் பெருமான்
அம்பாள்: வள்ளி, தெய்வானை
தீர்த்தம்: சரவணப்பொய்கை.

அருணகிரிநாதர் 83 திருப்புகழ்ப் பாடல்கள் திருச்செந்தூரில் பாடியுள்ளார். வேறு பலரும் பாடியுளர்.

..... மலைமுகம் சுமந்த புலவர் செஞ்சொல் கொண்டு
வழி திறந்த செங்கை - வடிவேலா
வளர் புனம் பயின்ற குறமடந்தை கொங்கை
மணிவடம் புதைந்த - புயவேளே
அலைமுகம் தவழ்ந்து சினை முதிர்ந்த சங்கம்
அலறி வந்து கஞ்ச - மலர் மீதே
அளிகலந் திரங்க இசையுடன் துயின்ற
அரிய செந்தில் வந்த - பெருமாளே!

- திருப்புகழ்

பிரயாணம் :-

திருச்செந்தூர் ஆலயத்துக்குப் பலமுறைகள் 2019 ஆம் ஆண்டு உட்பட மனையாளோடு சென்றாலும் 2014 ஆம் ஆண்டு போல் எவையும் சிறப்பிக்கவில்லை. இலண்டனிலிருந்து (PACKAGE HOLIDAY) முன்னமே முடிவு செய்த விடுமுறை. கந்தசஷ்டி நாள்கள் உட்பட எடுத்தோம். 23-10-2014 அன்று சென்னை விமான நிலையத்தை அடைந்தோம். பின்னர் சிறு விமானம் மூலம் தூத்துக்குடி விமான நிலையத்தில் இறங்கினோம். என்னே பிரமாதமான வரவேற்பு - மாலை போடாதது தான் குறை! அவர்கள் கார் ஒன்றை ரூபா 1000 உக்கு ஏற்பாடு செய்து அனுப்பினர். காலை 10 மணிபோல் உதயம் இன்டர் நாஷனல் (UTHAYAM INTERNATIONAL) என்ற விடுதியை அடைந்தோம்.



24-10-2014 வெள்ளிக்கிழமை கந்தசஷ்டி விரத ஆரம்ப நாள். இரவு 12 மணிபோல் எழுந்து நீராடி, மழை பெய்ததால் கார் மூலம் ஆலயத்தை அடைந்தோம். முதலில் கண்டது மேற்கு திசை நோக்கிய 157 அடி உயரம், 9 நிலை கொண்ட உயர்ந்த கோபுரமாகும். அதன் மேல் இருந்த வேல் மின்சார ஒளியில் பளிச்சென கண்ணைக் கவர்ந்தது. இக்கோபுர வாசல் பூட்டப்பட்டு இருந்தது. மூன்றாம் பிரகாரத்தில் சென்று அங்குள்ள மக்களோடு வரிசையில் சென்று பள்ளியெழுச்சி தரிசனம், தரிசித்தோம். மலைச்சுற்று எனும் மூன்றாம் பிரகாரம் முருக பத்தனாகிய சாண்டோ சின்னப்பா தேவரால் நிர்மாணிக்கப்பட்டது. கடற்கரை அருகில் செல்லும் இப்பிரதேசத்தின் இறக்கத்தில் சென்று தரிசித்து வலப்புறமாக வெளிவருவது ஏற்றமாகும். இது இறைவனை வணங்கினால் ஏற்றம் உண்டாகும் என்ற எண்ணத்தைக் கொடுக்கும்.

காலை நேரம், கடல் அலைகளைக் கண்டு இரசித்துவிட்டு மூன்றாம் பிரகாரத்துக்குச் சமீபத்தில், ஆலயத்தின் வடதிசையிலுள்ள வள்ளிகுகைக் கோயில் சென்றோம். செல்லும் நடைபாதை நன்கு

பராமரிகப்பட்டுள்ளது. கடல் அலைகள் மோத - மன அலைகள் எழ - இரசித்தபடி செல்லலாம். இப்பாதை 24 அடி நீளம், 21 அடி அகலம், 16 தூண்கள் கொண்ட மண்டபத்திற்கு செல்கிறது. சிறு பிரவேசக் கட்டணம் உண்டு. இம்மண்டபத்திலிருந்து குகைக்குச் செல்லல் வேண்டும். ஒருவர் மட்டும் குனிந்து சென்று அடைய முடியும். குகையில் 6 - 8 வழிபடுபவர் தான் நிற்கலாம். சிவாசாரியார் இருக்கிறார். மறுபக்கமாக வெளியே செல்லவேண்டும். காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிவரை இக்கோயிலை வழிபடலாம். இதற்குச் சமீபத்திலுள்ள மண்டபத்தில் ஆன்மிக சொற்பொழிவு நடைபெற்றது. மறுநாள் 25.10.2014 காலை சென்று புண்ணிய தீர்த்தமாக இருக்கும் நாளிக்கிணற்றில் நீராடினோம் இதற்கு கட்டணம் கொடுத்து வரிசையில் செல்லவேண்டும்.

நாளிக்கிணறு: கந்தபுஷ்கரண நன்னீர் ஊற்று கிணறு. ஆலயத்தின் தென்திசையில் 200 யார் தொலைவில் உளது. ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான மக்கள் நீராடுவர். 34 படிகள் ஊடாக கீழே சென்றால் 4 சதுர அடி உடைய 7 அடி ஆழமான சிறு கிணற்றை காணலாம். இதன் நீர் தூய்மையாய் இனிமையாய் தித்திக்கும். அள்ள அள்ளக் குறையாது. சமீபத்திலுள்ள நீர் உவர்ப்பாக இருக்கும் போது, இக்கிணறு மாத்திரம் புனிதமாக, தீர்த்தமாக இருக்கிறது. முருகன் தனது படை வீரர்களின் தாகத்தைத் தணிப்பதற்காக வேலூன்றி இதைத் தோற்றுவித்தார் எனக் கூறுகின்றார்.

நாளிக்கிணறுக்குச் சமீபத்தில் மூவர் சமாதி உளது. இம் மூவர்தான் ஆலயத்தை புனரமைத்தவர்கள். இச்சமாதியை வணங்கினோம்.

இதன்பின் ஆலயத்தினுள் சென்றோம். ஒரே மக்கள் கூட்டம். சிவாசாரியார்கள் எமைக் கவனிக்க சூழ்ந்தனர். நாங்கள் ரூபா 500 சீட்டு எடுத்து ஏனையோரோடு இணைந்து நேரே கருவறைக்கு சென்று அமர்ந்தோம்.

கருவறை முதலாவது பிரகாரத்தில் உளது. நிலத்திலிருந்து 15 அடி தாழ்வானது. சுப்பிரமணிய சுவாமி நின்ற நிலையில் கிழக்கே பார்த்தபடி தலையில் ஜடாமகுடத்தோடு அருள்புரிகின்றார். வலது கீழ்க்கையில் பூவும், இடது மேற்கையில் உருத்திர மாலையும் உளது. பூ சிவனைப் பூசிப்பதையும், உருத்திரமாலை ஞானரூபியாக இருப்பதையும் குறிக்கிறது. இடது பின்புறம் 5 சிவலிங்கங்கள் உள. இவற்றை முருகன் சூரனைக் கொன்றதால் பிரம்மகத்தி தோஷம் நீங்க வணங்குவதாகவும், தேவர்களும் முருகனை இடர் தீர்க்க வணங்குவதாகவும் ஐதிகம். சிவாசாரியார் முருகனுக்கு தீபம் காட்டிய பின்னர் இச்சிவலிங்கங்களுக்கும் தீபம் காட்டுவார். நாங்கள் அர்ச்சனை செய்வதைப் பார்த்தோம்.



பன்னீர் இலையில் பிரசாதம்: இங்கு விபூதிப் பிரசாதம் பன்னீர் இலையில் உளது. மிக மிக ஆவலாகவும், பரிபூர்ண பக்தியோடும் மக்கள் பெறுவர். இப்பன்னீர் இலையின் பின்பக்கம் 12 நரம்புகள் உள. இது முருகனின் 12 தோள்களைக் குறிக்கும். பிரசாதத்தை அரைத்து நீர்விட்டு தீர்த்தமாக குடும்பமாக போற்றி ஆனந்திப்பர். முருகன் ஞானரூபியாக இருப்பதாலும், தேவர்கள் வழிபடுவதாலும் கருவறையைச் சுற்றி வலம் செய்ய முடியாது.

இதன் பின்னர் கொடிமரம் - முழுவதும் ஒரு சந்தன மரத்தால் ஆனது - சென்று வணங்கினோம். இச்சிறப்புள்ள கொடி மரத்திற்குத்தான் முதல் சிவாசாரியார்கள் பூசை செய்வர்.

முதற்பிரகாரத்தின் மேற்கு பகுதியில் 108 சிவலிங்கங்கள், வடபக்கம் அரங்கநாதர் சந்நிதி, வடக்கில் பரம பக்தனான வீரபாண்டிய கட்டப்பொம்மன் வணங்கிய முருகன் வீற்றிருக்கிறார். மன்னன் செந்தூரனின் மணியோசை கேட்ட பின்னரே தனது உணவை உட்கொள்வது வழக்கம். மிக சக்தி வாய்ந்த சத்ருசங்கார மூர்த்தியும் இங்குளது. இம்மூர்த்திதான் சூரசங்காரம் செய்ததாக ஐதிகம். இரண்டாவது பிரகாரம் மாப்பிள்ளை சுவாமி என அழைக்கப்படும் குமாரவிடங்கப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் வாசலில் கிழக்கே காட்சியளிக்கின்றார். மேற்கில் ஆமை மேல் வீற்றிருக்கும் தட்சிணாமூர்த்தி - குருதலமாகியதால் பலமுடையவர் - குருதோஷம் உடையோர் வணங்கல் சிறந்தது. தெற்கே சனைச்சரன், சண்டேஸ்வரர் உளர். இத்தலத்தில் சனைச்சரனைத் தவிர நவக்கிரகங்கள் இல்லை. இத்தலத்தை முறையாக வழிபடுவதானால் முதலில் தூண்டுகை விநாயகரை வழிபடல் வேண்டும். இவரின் அநுமதி பெற்று, பின்னர், ஆலய தரிசனம் செய்வது முறையாகும்.

சூரசம்காரம்:-

இது பிரசித்திபெற்றது. ஜெயந்திநாதர் தனது படைகளோடு சென்று சூரனை வென்ற இடம். படைகளோடு சென்றதால் திருச்செந்தூர்தான் படைவீடு ஆகும். சூரன் போரன்று இலட்சக் கணக்கான மக்கள் கூடுவர். கடல் அலையா தலை அலையா என்று வியப்படையச் செய்யும். "வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா", "வீர வேல் முருகனுக்கு அரோகரா". என்ற கோஷம் விண்ணை எட்டும். சங்காரம் நிறைவுபெற்றதும் யாவரும் கடலில் தீர்த்தமாடுவர்.

முருகன்:-

தமிழனின் கடவுளாகக் கருதப்படுபவர். தெய்வசிகாமணி ஆவார். குருவே தெய்வங்களுக்கு மேலான மணி. முருகன் சிவனுக்கு குருவாக இருந்ததால் தெய்வசிகாமணி. ஆன்மிக சொற் பொழிவுகளில் ஆறு திருமுருகன், "கந்தபுராணத்தை, யாழ்ப்பாணத்தவர்தான் படித்தும், பயன் கூறியும், உரை செய்தும் பேணி வளர்க்கின்றனர்" என்று பேசியது மறக்கமுடியாது. அவ்வமயம் தமிழர் தகவல், சைவநீதி ஆசிரியர் காலஞ்சென்ற நா. சிவானந்தஜோதி அவர்கள் முன் வரிசையில் அமர்ந்து இருந்த காட்சி பசுமரத்தாணி போல் பதிந்துவிட்டது.

நாலு உற்சவ மூர்த்திகள் உளர். ஆலயத்தில் பங்குனி உத்தரம், ஆவணிவிழா, திருக்கார்த்திகை, கந்தஷஷ்டி நாள்கள் சிறப்பானவை.

ஆலயத்தை அடைவதற்குச் சமீப விமான நிலையம் தூத்துக்குடி, மதுரை.
புகையிரத நிலையம்- திருச்செந்தூர். பேருந்து வசதிகள் மிக நன்றாக உளது.

மனமே முருகனின் மயில்வாகனம்
என் மாந்தளிர் மேனியே குகன் ஆலயம்
குரலே செந்தூரின் கோயில் மணி
அது குகனே ஷண்முகனே என்றொலிக்கும் இனி

- கொத்தமங்கலம் சுப்பு



# மகாசிவராத்திரி

## பிரம்மதேவரும் விஷ்ணுதேவரும் அடி முடி தேடிய வரலாறு

திருக்கைலாயத்திலே தேவர்களின் சபை வழமைபோல் கூடுகிறது. சபையினர் எல்லோரும் எம் சைவப்பெருமக்களால் பரப்பிரம்மம் என்று கருதப்படும் பெருமானாகிய எங்கும் நிறைந்த எல்லாம் அறிந்த முப்பத்துமுக்கோடி தேவர்களின் அதிபதியாக விளங்கும் அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தேவர்கள் யாரும் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருக்க படைப்புத் தொழில் புரியும் பிரம்மதேவரோ சபையில் தம் அருகில் இருக்கும் ஆட்டுத்தலையுடன் கூடிய தம் மகனாகிய தக்கனைப் பார்க்கிறார். அங்கே, சபையில் தகப்பனுக்கும் மகனுக்கும் இடையே ஒரு கலந்துரையாடல் நடைபெறுகிறது.

என் உதிரத்தில் தோன்றிய மகனே! நான் உன்னை எவ்வாறு வளர்த்தேன் என்பதை நான் சொல்லி நீ தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. என்னுடன் இருக்கும்போது எவ்வளவு பவ்வியமாக இருந்து பாடங்கள் படித்தாய்! எல்லாக் கலைகளையும் நீ என்னிடமிருந்துதானே கற்றாய்! அதன்படி நீ உன் வாழ்க்கையில் நடந்து கொண்டதுண்டா? நீ அவ்விதம் கற்றதை உள்வாங்கி நடந்திருந்தாயானால் இங்கே இப்போது அடங்கி ஒடுங்கி ஆட்டுத்தலையுடன் இந்த மாபெரும் தேவசபையிலே நின்றிருக்க மாட்டாய்! மரணமற்ற வாழ்வு தேவர்களுக்குண்டு என்பது தெரிந்தபடியால்தான் நீ இவ்வாறு நடந்து கொண்டாயா? உன்னுடைய செய்கையினால் நீ பெற்ற பலன்தான் என்ன? சிவனிடம் தவமிருந்து நீ பெற்ற வரங்களினாலே என்ன நல்ல காரியங்களைச் செய்தாய்? இறைவனின் பண்புகளையெல்லாம் என்னிடம் இருந்து அறிந்து நீ பெற்றதன் பயன்தான் என்ன? மகனே! எல்லாம் தெரிந்த நீ, எப்படிப் பரம்பொருளை நிந்திக்கும் நிலைக்கு உள்ளானாய்? மேலோர்கள் சொன்ன புத்திமதிகளை தட்டிக்கழித்து, "எல்லாம் எனக்குத் தெரியும்" என்றதன் பலன்தான் இப்பொழுது நீ உன்னுடைய ஒப்பற்ற அழகை இழந்து ஒரு ஆட்டுத்தலையுடன் நிற்பதுதானா? நீ என்னிடம் இருந்து கற்ற அறிவு அறிவல்ல! சிவனிடமிருந்து பெற்ற வரங்களால் அவரின் மேன்மையை மறந்தாய். அளப்பரிய செல்வம் உன்னிடம் வந்ததால் தான் இந்த நிலைக்கு நீ ஆளானாய்! இது உண்மையில் உன் குற்றமன்று! இது ஒருவித மயக்கத்தால் உருவானது. ஆன்மாக்கள் அனைத்துக்கும் பொதுவாய் உள்ள மயக்கந்தான் இது! கேள்! மகனே! பரம்பொருள்தான் உயர்ந்தது என்பதை நிலைநாட்ட சர்வ வல்லமை பொருந்திய சிவபெருமான் எனக்கும் விஷ்ணுதேவருக்கும் இடையே எழுந்த யார் பெரியவர் என்ற வாதத்தை எவ்வாறு முடிவுக்கு கொண்டுவந்தார் என்பதைக் கூறுகிறேன், அமைதியாகக் கேள்!

**சிவபுத்திரன்**

படைத்தல் தொழில் செய்யும் பிரம்மதேவராகிய நானும் காத்தல் தொழில் செய்யும் விஷ்ணு தேவரும் இதுபோன்ற ஒரு மயக்கத்தால், சிவனின் திருவருளினாலே எல்லாவற்றையும் அறியும் முற்றறிவைப் பெற்ற நாமே, நம்மில் யார் பெரியவர் என்று எமக்குள்ளேயே பல முறை தர்க்கித்துள்ளோம். யார் முதலில் பரம்பொருளைக் காண்கின்றோமோ அவரே உலகின் பரம்பொருள் என்ற முடிவிற்கு வந்தோம். அதன்படி "நான்தான் உலகைப் படைப்பவன்" என்று நான் கூற, "இல்லயே இல்லை, உன் தொழில் படைப்பது மட்டுமே! உன் படைப்பை காப்பது

நான். உன் படைப்பின் கால எல்லை மிகக்குறுகியது என்பது உலகறிந்த உண்மை. ஆனால் ஆண்டாண்டு காலமாக உயிர்களைப் பேணிப்பாதுகாப்பது நான் மட்டுமே. ஆகவே உன்னிலும் பார்க்க நானே பெரியவன்" என்று விஷ்ணுதேவர் கூற தேவர்களுக்கிடையே இரு பெரும் பிரிவுகள் ஏற்பட்டு, விவாதங்கள் பல்கிப் பெருகின. இவை எவற்றிலும் தலையிடாமல் தங்களுக்குள் சிரித்துக்கொண்டே இருந்த வேதங்களைக் கற்றோர், "பரம்பொருளாகிய சிவனே எல்லாரிலும் உயர்ந்தவர். நீங்கள் இருவரும் மனித குலத்தவர்கள் மாதிரி ஏன் சண்டையிட்டுக் கொள்கிறீர்கள்" என்று அறிவுரை கூறினர். இருவருமே இந்த அறிவுரையைச் செவிமடுக்கவில்லை. நான்தான் பிரமம் என்று இருவருமே எங்கள் பராக்கிரமத்தைக் காட்டப் போரே சிறந்தது என முடிவெடுத்தோம். யார் பெரியவர் என்பதை இப்போர்தான் இறுதியாக முடிவு செய்யும் எனபதை ஏற்றுக்கொள்வோம் எனத் தீர்மானித்தோம்.

போர் வந்தால் அழிவுகள் நிச்சயமல்லவா! இப்போர் தனிப்பட்ட கௌவரவத்தை நிலைநாட்ட நடந்த போர் அல்லவா! படைப்பவனும் காப்பவனும் தங்களுக்குரிய சகல படைகளையும் பயன்படுத்த, அதன் விளைவால் மூவுலகமும் அழியத் தொடங்கியது.. சிவனிடம் இருந்து பெற்ற ஆயுதங்களைக் கொண்டு நானே பிரம்மம் என்பதை நிலைநாட்ட, எல்லாம் சிவமே என்பதை மறந்து, தேவர்கள் நடு நடுங்கி ஓட பூலோக மக்கள் எல்லாம் அவர்கள் ஏவிய அக்னி ஏவுகணைகளால் அழியத்தொடங்க இவர்கள் சண்டையில் நடுநிலை வகித்த, "சிவமே பரம்பொருள்" என்று வாழும் இருபக்கமும் சாராத தேவர்கள் கைலாய மலைக்கு விரைந்து சென்று சிவனிடம் முறையிட்டனர்.

அங்கே உலகில் நடப்பவைகளையெல்லாம் தன் ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டிருந்த சிவபெருமான், கலகம் பிறந்தால் ஞானம் பிறக்கும் என்ற கோட்பாட்டின்படி இயங்கும் நாரதமாமுனிவரை அழைத்து, "நாரதரே!. தேவர்கள் இருவருமே தாங்கள்தான் பரம்பொரும் என்று தர்க்கித்துக்கொண்டு உலகையே அழிக்கத் தொடங்கி விட்டார்கள். நீர் அங்கு விரைந்து சென்று நீதியை நிலைநாட்டி வாரும்" என்றார். நாரதர் அங்கு போர் புரிந்து கொண்டிக்கும் படைப்பவனுக்கும் காப்பவனுக்கும் இடையில் சென்று போரை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்வித்தார். "பிரம்ம, விஷ்ணு தேவர்களே! தேவையற்ற போரால் மூவுலகுக்கும் நாசம் விளைவிக்கிறீர்கள். இதனால் எதுவும் பலன் ஏற்படப்போவதில்லை. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர என்னிடம் ஒரு உபாயம் உண்டு. அதன்படி நீங்கள் நடப்பதாக வாக்குத் தந்தால் அந்த உபாயத்தை நான் சொல்லுகிறேன் எனக்கூற, இருவருமே அதை ஏற்றுச் சத்தியம் செய்தனர். தாங்கள் இருவரும் தங்களுடைய கோபத்தையும் அகங்காரத்தையும் வெறுத்தொழியச்செய்து தங்களை செம்மையானவர்களாக விளங்கச்செய்ய எம்பெருமான் திருவுளங் கொண்டுள்ளார். அதன்படி எதிர்வரும் மாசி மாதத்தில் சூரியனும் சந்திரனும் கூடுகின்ற அமாவாசை தினத்துக்கு முதல் நாளான சதுர்த்தசியில் நடு இரவு நேரத்தில் நீங்கள் யாவரும் கண்டு நடுங்கும் வகையில் பரம்பொருள் சிவலிங்க வடிவில் ஓர் அக்னிக் குழம்பு வடிவாக தோற்றம் பெறுவார்.. அக்குழம்பு சிறது நேரத்தில்தன் வெம்மையைக் குறைத்து செம்பிழம்பாக தோற்றமளிக்கும். பின்பு அதன் கூற்றுப்படி ஒழுகுவீராக என நாரதமாமுனி கூறிச்சென்றார்.

நாரதர் கூறிய அதே தினம்வரை பொறுத்திருந்த விஷ்ணுவும் பிரம்மாவும் அமைதியாயிருந்த பொழுது. ஆகாயத்தில் ஓர் அசரீரி வாக்கு, ˙சிறுவர்களே, நாரதரிடம் நீங்கள் இருவரும் செய்த சத்தியவாக்கின்படி.செம்பிழம்பின் அடியையும் நுனியையும் தேடித் தெளிவீராக! என்றது.

இக்குழம்பின் தன்மையைப் பற்றி எமக்குத் தெரியாது. இருந்தும் நாரத மாமுனிவருக்கு கொடுத்த வாக்கின்படி இக்குழம்பின் அடியையும் முடியையும் தேடுவோம் என முடிவெடுத்து,

பிரம்மதேவர் வானில் அன்னப்பட்சி வடிவங்கொண்டு மேகத்தை ஊடுவிக் கொண்டு பிழம்பின் முடியைத் தேடிப் பறக்கலானார். காத்தல் தொழில் புரியும் விஷ்ணுதேவரோ பன்றி உருவெடுத்து அக்கினியை ஒத்த சிவந்த கண்கள், கூரிய ஈட்டி போன்ற பளபளக்கும் வெண்ணிற பற்கள் கொண்ட பார்ப்போர் நடுங்கும் பயங்கர வடிவெடுத்து நிலத்தைப் பிளந்து பிளந்து பிழம்பின் அடியைத் தேடலானார். நாள்கள் கிழமைகளாகி, கிழமைகள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகியும் இருவராலும் பிழம்பின் அடியையும் முடியையும் தேட முடியவில்லை. இதில் முதலில் களைத்துப்போனவர் காத்தல் தொழில்புரியும் விஷ்ணுதேவரே ஆவார். தம் மமதை அழிந்து பரம்பொருளாகிய சிவனே உயரந்தவர் என்பதை ஏற்றுக்கொண்டு மீளலானார்.

ஆனால் உயர உயரப் பறந்து பிழம்பின் முடியைத் .கண்டுவரப்போன பிரம்மதேவர் முடியைக் காணமுடியாமல் களைத்து, முடியை எவ்வளவுகாலந்தான் தேடுவது, வானத்திக் எல்லையைக்கூட காணமுடியவில்லையே! என்ன செய்யலாம் என யோசனையில் ஆழ்ந்துபோனார். ஆனாலும் திரும்பி வர மனமில்லாமல் இருக்க தோல்வியை ஒப்புக்கொள்ளவும் முடியாது. விஷ்ணுதேவர் அடியைத் தேடி வந்துவிட்டால் நான் தோல்வியை ஒப்புக் கொண்டதாய் முடியும் அல்லவா. எதற்கும் இன்னும் கொஞ்சம் பறந்து பார்ப்போம் என எண்ணியபோது பரம்பொருளின் முடியிலிருந்த ஒரு தாழம்பூ விழுந்து கீழே வந்து கொண்டிருந்தது. அன்னப்பறவை உருவம் கொண்டிருந்த பிரம்மா தன் வாயில் அப்பூவைப் பற்றிக் கொண்டு போர் ஆரம்பித்த இடத்திற்கு வந்தார். அங்கே ஏற்கெனவே வந்திருந்த விஷ்ணுதேவரைப் பார்த்து, “நான் கூறியபடியே தீப்பிழம்பின் உச்சியை அடைந்து தீப்பிழம்பாகிய சிவனின் உச்சியில் இருந்த தாழம்பூ மலரை எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன். அப்படித்தானே!.” ஏன்று தாழம்பூவைக்கேட்க, தாழம்பூவோ பிரம்மதேவர் சொன்னதை, “ஆமாம்” என்று ஆமோதித்தது. செம்பிழம்மாக இருந்த சிவலிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு, பிரம்மதேவரைப் பார்த்து, “ பிரம்மதேவரே, நாம் யார் என்பதை மறந்து, ஆணவத்தாலும், அகங்காரத்தாலும் நீர் செய்த கர்ம வினைகளாலும் எமை மறந்து எமையே உதாசீனம் செய்யத்தலைப்பட்டபடியால். உமது ஐந்து தலைகளில் ஒன்றை நீர் இழக்கக்கடவது. தாழம்பூவே, நீ பொய் கூறி, பிரம்மதேவருக்கு துணைபோனபடியால் என் தலையிலோ அல்லது தெய்வங்களுக்கு படைக்கும் பூக்களிலோ உமது பிரசன்னம் இருப்பது தடை செய்யப்படுகிறது.. இதில் எந்தவித மாற்றமும் கிடையாது” என்று கூறி மறைந்தார். இவை எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த, மகாமுனிவரான நாரதரோ, “பரப்பிரம்மம் எது என்பது தாங்கள் இருவரும் இப்போது புரிந்திருப்பீர்கள்” என்றார்.

இதையே, உலகில் வாழும் சைவத் தமிழ் மக்கள் எல்லோரும் சிவலிங்கம் செம்பிழம்பாகத் தோன்றிய தினமாகிய மாசிமாதத்தில் வரும் சூரியனும் சந்திரனும் கூடுகின்றன தினமான அமாவாசை தினத்துக்கு முதல் நாளான சதுர்த்தசி தினத்தைச் சிவராத்திரி தினமாகக் கொண்டாடுகிறார்கள்.



# சுட்ட மண்கற்கள் சுத்தமான பொன் கட்டிகளான அற்புதம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரிதம்



சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாரைத் திருமணஞ் செய்து திருவாரூரை இருப்பிடமாய் அமைத்து வாழ்ந்து வந்தார். திருவாரூரை விட்டுப் பிரிய மனமின்றியே யாத்திரை போவார். தியாகேசப் பெருமானை ஞான நாயகனாக வழிபட்டு வந்தார். பரவையார் கோயிலிலே நடனமாடுவார். சிவனடியார்க்கு வேண்டியவற்றைச் செய்து கொடுப்பார். சிறப்பாக விழாக்காலங்களில் அன்னதானம் அளித்து, பொற்காசும் கொடுப்பார். உறைவிடம் தேவைப்பட்டோருக்கும் அந்த வசதிகளைச் செய்வார். சுந்தரமூர்த்தி நாயனார் பதினெட்டாவது வயதில் வெள்ளையானை மேல் அமர்ந்து திருக்கைலாசம் சேர்ந்தார். அவருடைய இல்லற வாழ்க்கை மூன்று வருடங்களுக்கு மேலில்லை. வாழ்க்கைச் செலவுக்கு நண்பர்களும் அடியவர்களும் உதவியிருக்கிறார்கள். குண்டையூர்க்கிழார் இவர்களுள் ஒருவர்.

### இடைக்காடு சயம்பு

திருவாரூர்ப் பெருமானுக்கும் பங்குனி உத்தர விழாக்காலம் அண்மித்தது. அடியவர்களை ஆதரிக்க ஏராளமான பொருள் தேவைப்படும். ஆனபடியால் இறைவரிடமே வேண்டிப் பெற வேண்டுமென்று அண்மையிலுள்ள திருப்புகலூர் தலத்துக்குப் போனார் சுந்தரர். திருவாரூர் தியாகேசரிடமே பெற்றிருக்கலாமே என்று கேட்டால் அது தவறு. ஆன்ம நாயகனாய்ப் பூசை செய்யும் மூர்த்தியிடம் பொருள் கேட்கக் கூடாது என்பது சிவாகமவிதி. இப்படி வேறு இரண்டு தலங்களில் பின்னாளில் பொன் பெற்றிருக்கிறார் நாயனார்.

செறிபுள் சடையார் திருவாரூர்த் திருப்பங் குனியுத் திரத்திருநாள்
குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவிற் குறைவறுக்க
நிறையும் பொன் கொண்டணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூர்
இறைவன் பாதம் பணியவெழுந் தருளிச் சென்றங் கெய்தினார்

கோயிலை வழிபட்டு, வீதிகளை வழிபட்டு, கோபுரத்தை வழிபட்டு, உள்வீதி வலம் வந்து இறைவர் திருமுன் நின்றார்.

"நின்று பதிக விசைபாடி நிகழ்ந்த கருத்து நிகழ்விப்பார்".
ஒன்றி நின்று இனிய பாடல்களைப் பாடித்தாம் வந்த காரணத்தை விண்ணப்பித்தார்.

உடனே பொன் கிடைக்கவில்லை. ஆகையால், சிறிது நேரம் அமருவோம் என்று கொடி மரத்துக்கு முன்னால் அமர்ந்திருந்தார் நாயனார். தூக்கம் வந்தது. படுக்க விரும்பினார். அங்கு ஒரு புறம் செங்கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. உயரங் குறைந்த அகல நீளமான மண்

பலகைகளாலே அந்த நாள்களில் கட்டட வேலைகள் செய்தார்கள். அந்தப் பலகைகளில் தலைவைத்துப் படுக்க அளவாக மூன்று நான்கு கற்களை எடுப்பித்து அடுக்கி மேலே உத்தரீயத்தை விரித்துப் படுத்தார். மற்றைத் தொண்டர்களுந் தூங்கினார்கள். சிறிது நேரத்தில் தூக்கம் நீங்கி விழித்தார். எழுந்து உத்தரீயத்தை எடுத்தார். ஆகா! அற்புதம்!!

“வெற்றி விடையா ரருளாலே வேமண் கல்லே விரிசுடர்செம்
பொற்றிண் கல்லா யினகண்டு புகலூ ரிறைவ ரருள் போற்றி”

இறைவன் திருமுன் விரைந்தார் நாயனார். பேரன்புடனும் நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் உச்சிமேலேடுத்த கைகளுடன் பதிகம் பாடினார்.

தம்மை யேபுகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதேஎந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங் கூறையு மேத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதவற் கியாது மையுற வில்லையே!

சோறுங் கூறையும் உலக வாழ்வுக்கு அவசியமானவை. அகங்கிடைக்கும். உயர்ச்சி பெறலாம். இடர் கெடும். முத்தியடையலாம். ஒழுக்கமில்லா உலோபிகளைப் பாடாதீர்கள் புலவர்களே! திருப்புகலூர் இறைவனைப் பாடுங்கள். இப்பதிகத்தில் சுவையான பாடல்கள் இருக்கின்றன. வாழ்க்கை நிலையில் பலதிறத்து உலோபிகளையும் அவர்கள் பின் சென்று இறக்கும் அறிவற்ற புலவர்களையும் வைத்துச் சிரிக்கவும் சிந்திக்கவும் பாடினார்.

செறுவி னிற்செழுங் கமல் மோங்குதென் புகலூர் மேவிய செல்வனை
நறவப் பூம்பொழி னாவலூரன் வனப்பகை யப்பன் சடையன்றன்
சிறுவன் வன்றொண்ட னூரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர்
அரவ னாரடி சென்று சேர்வதற்கியாது மையுற வில்லையே

திருக்கடைக்காப்பில் தனது பெயர், ஊர்ப்பெயர், தந்தை தாயரின் குறிப்புடன் வனப்பகையப்பன் என்றும் குறித்து வைத்தார். நாட்டியத்தான்குடி கோட்புலி நாயனார் தானமாக அடிமைகளாகத் தனது அதீத பக்தி மேலீட்டினால் கொடுத்த இரண்டு பெண்களை அவர் தனது மகள்களாகவே ஏற்று மடியில் வைத்து ஆசீர்வதித்துவிட்டதை நெடுங்காலம் தனது பாடல்களில் ஞாபகப்படுத்திக் கொண்டார். சிறுவன் தொண்டனுக்கு இரண்டு மகள்கள்! நாயனார் திருப்பாதங்கள் போற்றி!

## லௌகிகம்

உலக விஷயங்களில் ஈடுபடாதிருக்கும் வரையில் ஒரு பையன் கவலையற்றுச் சந்தோஷச் சித்தனாகவே இருப்பான். கல்யாணமாகி உலகக் கட்டு ஒன்று ஏற்பட்டுக் குடும்பப் பொறுப்பை வகிக்கவேண்டி வந்ததும், அவனுடைய சந்தோஷங்கள் எல்லாம் பறந்தோடிவிடுகின்றன. முகத்தில் துக்கம், துன்பம், கவலை இவற்றைக் குறிக்கும் அடையாளங்கள் தோன்றுகின்றன. காலையில் வீசும் காற்றைப்போலச் சுயேச்சையாகவும், அன்றலர்ந்த பூவைப்போலப் புதிதாகவும், அழகிய பனித் துளியைப்போலப் பரிசுத்தமாகவும், ஆயுள் உள்ளவும் பாலனாகவே இருப்பவன் எவனோ அவன்தான் பாக்கியவான் இது பகவான் இராமகிருஷ்ணரின் அருள் வாக்கு.

**நன்றி: கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்**

# சிவனடியைச் சிந்தி நெஞ்சே!

அன்பிலா ரோடுறவு கொள்ளாதே அடுத்தோர்க்குத்
துன்பத்தைச் செய்யாதே சூதும் வாதும் போசாதே
இன்பத்தில் துன்பத்தில் ஏகமன வாயிருந்து
தெம்புடனே பரன்பாதம் அந்திசந்தி சிந்திநெஞ்சே 1
ஆரோடும் பகையாதே ஆசைதனைக் கொள்ளாதே
ஊரோடு ஒத்துநட உண்மையைத் தேடிக்கொள்
நீரோடே வெகுநேரம் நீந்திவிளை யாடாதே
சீரோடே சிவபாத மெப்போதுந் தேடுநெஞ்சே 2
இடுவதை மறவாதே ஏழைகளை இகழாதே
கெடுவது நினையாதே கேளிரைப் பிரியாதே
சுடுவது சொல்லாதே துணையின்றிச் செல்லாதே
படுதயிற் பலிகொள்ளும் பரமனைப் பாடுநெஞ்சே 3
ஈவது விலக்காதே யிழிதொழில்கள் செய்யாதே
சாவது வந்தாலுஞ் சத்தியத்தை மறவாதே
ஆவதும் அழிவதும் நமக்கில்லை யெனவறிந்து
தேவர்கள் தொழுதேத்துஞ் சிவனடியைச் சிந்திநெஞ்சே 4

(யோகர்சுவாமிகளின் "நற்சிந்தனை" நூலிலிருந்து)



# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


உ

சிவயோகம்

SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)







இந்து கலாசார மையம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CR0 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 |
Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

# SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: **020 8810 0835 020 8840 0485**

www.ammanealing.org Email: info@ammanealing.org

கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது

1. இலண்டன் கனக துர்க்கை அம்மன் இல்லம் (சாரதா இல்லம்) - புதுக்குடியிருப்பு
2. இலண்டன் கனக துர்க்கை அம்மன் இல்லம் (மலையக சிறுவர் இல்லம்) - பதுளை
3. திலகவதியார் இல்லம் - மட்டக்களப்பு
4. அன்னை சாரதா இல்லம் - திருகோணமலை
5. அம்மன் இல்லம் - அம்பாறை
6. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் - வவுனியா
7. திருக்கேதீஸ்வரன் சிவன் அருள் இல்லம் - மன்னார்
8. விபுலானந்தர் இல்லம் - மட்டக்களப்பு
9. மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லம் - கிளிநொச்சி
10. அன்பகம் - வவுனியா
11. விபுலானந்தர் சிறுவர் இல்லம் - அக்கரைப்பற்று
12. ஒளிரும் வாழ்வும் - கிளிநொச்சி
13. லிற்றில் எயிட் - வவுனியா

மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்கள் பேருதவியினால் 500 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவவேண்டுமென வினயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த ஆண்டில் "காக்கும் கரங்கள்" திட்டத்திற்கு **£58,849.00** பவுண்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆலயம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை எமது ஆலயத்தினால் தாயகப்பணிக்கு **£3,365,415.14** பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



இலண்டன் கனக துர்க்கை அம்மன் இல்லம் (சாரதா இல்லம்) - புதுக்குடியிருப்பு



இலண்டன் கனக துர்க்கை அம்மன் இல்லம் - பதுளை



திலகவதியார் இல்லம் - மட்டக்களப்பு



அம்மன் மகளீர் இல்லம் - அம்பாறை



அன்பகம் - வவுனியா



மகாதேவா ஆசிரமம் - கிளிநொச்சி



சிவன் அருள் இல்லம் - மன்னார்



விவேகனந்தா இல்லம் - அக்கரைப்பற்று

தாயகத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடந்த வருடம் மட்டும் **£41,360.00** கல்வி பயில உதவியாக வழங்கப்பட்டது.

ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்! அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.! அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்!

Design & Printed by: RS Printers Ltd 07765 224 337 / 020 8782 3844


SKOT
DISPENSING CHEMISTS
139 Victoria Rd
Edmonton
London N9 9BA
020 8803 3221
skthakrar@btinternet.com
OPENING TIMES
Monday - Friday: 9:00am - 6:00pm
Saturday: 9:00am - 1pm

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஜனவரி (14-01-2023) தொடக்கம் ஏப்பிரல் (14-04-2023) வரை

| | | |
|---|---|---|
| *14.01.2023* | சனி | தைப்பொங்கல் |
| *19.01.2023* | வியாழன் | பிரதோஷம் |
| *21.01.2023* | சனி | அமாவாசை விரதம் |
| *02.02.2023* | வியாழன் | பிரதோஷம் |
| *04.02.2023* | சனி | தைப்பூசம் |
| *17.02.2023* | வெள்ளி | பிரதோஷம் |
| *18.02.2023* | சனி | மகாசிவராத்திரி |
| *04.03.2023* | சனி | பிரதோஷம் |
| *05.03.2023* | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |
| *06.03.2023* | திங்கள் | மாசி மகம் |
| *19.03.2023* | ஞாயிறு | பிரதோஷம் |
| *03.04.2023* | திங்கள் | பிரதோஷம் |
| *04.04.2023* | செவ்வாய் | பங்குனி உத்தரம் |
| *14.04.2023* | வெள்ளி | சோபகிருது வருடப் பிறப்பு |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை

மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Title | | Home Phone | | | |
| First Name | | Mobile No | | | |
| Surname | | Email ID | | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | | ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | | |
| Post code | | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# பாஞ்சாலி சபதம்



சென்ற இதழ்த் தொடர்ச்சி....

அறநெறியில் தவறாத தருமர் ஊழ்வினை காரணமாக மக்களை மயக்கிக் கெடுக்கும் சூதாட்டத்துக்குச் சகுனியின் வலுக்கட்டாயத்தினால் சம்மதித்துவிட்டார். சகுனி, தான் எப்படியும் வென்றுவிடுவேன் என்ற நம்பிக்கையுடன் ஆரவாரமாக இருந்தான். நேசமுள்ள பாசமுள்ள விதுரனும் அங்கிருந்த ஏனைய நீதிநெறி உணர்ந்தோரும் செய்வதறியாது பேச்சற்றவர்கள் ஆகிவிட்டார்கள். சிந்திக்க முடியாத நிலையில் மனம் மயங்கிவிட்டனர் எனப் பாரதியார் கூறுகின்றார். மகாபாரதத்தைப் படிப்பவர்கள் அனைவர் மனத்திலும் அவையில் அன்று இருந்த பெரியோர்கள் ஒருவரும் ஏன் இந்தக் கொடிய சூதைத் தடுக்கவில்லை என்ற கேள்வி இருந்துவருகிறது.

இந்த நிலையில், பாண்டவர் தலைவனான தருமர் சகுனியைப் பாரத்து, ஆர்ப்பாட்டம் செய்யாதே, சூதாடுவதற்கு என்ன பொருளைப் பணயமாக வைக்கப்போகிறாய், சொல் என்கிறார். அளவற்ற செல்வமுடைய அரசர்களோடு சூதாடத் தொடங்குகிறாயே என்றார். உடனே, துரியோதனன் எழுந்து நின்று, “என்னிடம் அருமையான செல்வம் அளவில்லாதது உண்டு. நீ ஒன்று வைத்தால், நான் ஒன்பது மடங்கு வைப்பேன். நீ உன்னைப்பற்றிப் பெருமைப்பட்டுக்கொள்ளதே! அடக்கமாக இரு” என்றான். “ஒருவர் சூதாட, அதற்கு இன்னொருவர் பணயம் வைப்பது தர்மந்தானோ சொல்லு தம்பி” என்று தருமர் கேட்டார். அதற்குத் துரியோதனன், “இதில் ஒரு வர்மமும் இல்லை, (கெடுதல் நினைக்கவில்லை) மாமன் சூதாட மருமகன் பணயம் வைப்பதில் என்ன தவறு உள்ளது? வெறும் பொழுதுபோக்குக்குத்தானே சூதாடுகிறோம். இதற்கு ஏன் பிழை பிடித்து அரற்றுகிறாய்” என்று நகைத்தான். “தவறுகளை இங்குள்ள அரசர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன்” என்றார் தருமர்.

பின்பு தருமர் ஒரு ஒளிபொருந்திய மணிமாலையைப் பணயமாக வைத்தார். களி மிகுந்த பகைவன் (வெற்றி கிடைக்கப்போகிறது என்ற மகிழ்ச்சியுடன் எதிரியாகிய) துரியோதனன் சகுனி பக்கத்தில் பல செல்வங்களைப் பணயமாகச் சொல்கிறான். கண் இமைக்குமுன்னரே மாமன் சகுனி தர்மரின் மாலையை வென்று எடுத்துக்கொள்கிறான். குற்றமற்ற தர்மன் மேலும் பல பணயங்களைச் சொல்கிறார். ஆயிரம் குடம் பொன், ஆயிரக்கணக்கான பணியாட்கள், ஆயிரக்கணக்கான தொண்டர்கள் என ஒவ்வொன்றாக வைக்கவைக்க, சகுனி பணயம் இதென்று சொல்லமுன்னரே வென்றெடுத்தான். அடுத்து, கரிய பெரிய யானைகள், யமனைப்போலப் போர்க்களத்தில் மோதவல்லனவான ஆயிரம் யானைகளை தர்மர் வைத்தார். அதனை இழிஞன் (இழிந்தவன்) வென்றுவிட்டான். பின்பு, தேர்கள், தேரை ஓட்டும் பாகர்கள், குதிரைப்படை என எல்லாவற்றையும் தர்மர் ஈடுவைத்து இழந்தார். எண்ணிலாச் செல்வத்தையெல்லாம் தர்மர் வைத்த அந்தக் கணமே வஞ்சகனான சகுனி வென்றெடுத்தான். தர்மர் இவற்றை இழந்த விதத்தையும் சகுனியின் தூண்டுதலையும் பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்.

மாடிழந்து விட்டான் தருமன் மந்தை மந்தையாக
ஆடிழந்துவிட்டான் தருமன் ஆளிழந்துவிட்டான்
பீடிழந்த சகுனி அங்கு பின்னும் சொல்லுகின்றான்
நாடிழக்கவில்லை தர்மா நாட்டை வைத்திடென்றான்

இந்நிலையில் மனம் பொறுக்காத விதுரன் சொன்ன வார்த்தைகளை பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்.

ஐயகோ இதை யாதெனச் சொல்வோம்
அரசரானவர் செய்குவதொன்றோ
மெய்யதாகவோர் மண்டலத்தாட்சி
வென்று சூதினில் ஆளுங் கருத்தோ
வையமி∴து பொறுத்திடுமோ - மேல்
வானம் பொறுத்திடுமோ பழி மக்காள்
துய்ய சீர்த்தி மதிக்குலமோ நாம்
'தூ' என்றெண்ணி விதுரனும் சொல்வான்

ஐயகோ, இதை எப்படிச் சொல்வது? சூதாட்டத்தால் நாட்டை வென்று ஆளும் எண்ணமோ? இதைப் பூமி, வானம் பொறுக்குமோ? நாங்கள் மேன்மை மிக்க சந்திரகுல மன்னர்கள்தானா? (இப்படி இதுவரை எவருமே செய்ததில்லையே) என்று சொன்ன விதுரன் 'தூ' எனத் துப்புகிறார்.

"குருகுல வேந்தர்களே! கேளுங்கள். போரில் மடிந்து நரகத்துக்குப் போக வழி தேடாதீர்கள். இதனைப் பாண்டவர் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் பாஞ்சாலத்தரசனும் கிருஷ்ணரும் வெகுண்டு எழுந்து குலத்தை வேரறுப்பர். விதியானது எங்கள் குலத்தை அழிக்கத்தான் வக்கிர புத்திகொண்ட துரியோதரனை எம்மிடை பிறப்பு எடுக்க வைத்தது. இவன் பிறந்தபோதே நரி ஊளையிட்டது. அதைக்கேட்ட சாத்திரம் அறிந்தோர் இக் குழந்தையால் நாட்டில் குழப்பம் ஏற்படும் என்றனர்."

பின்பு அண்ணன் திருதிராட்டிரனைப் பார்த்து, "மகன் வெற்றியடைகிறான் என்று முகம் மலர்ந்து பெருமையுடன் இருக்கிறாய். இது, முடவன் மலையிலுள்ள கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோல ஆபத்தான பயனற்ற ஆசை என்பதை நீ உணரவில்லை". என்கிறார்.

"குடித்தவரை மயங்கச் செய்யும் கள்போன்ற சூதினால் மனம் மயங்க முறைகெட்டு வரவிருக்கும் ஆபத்தை அறியாதுள்ளீர்கள். மூடன் இத் துரியோதனனால் எங்கள் குலம் முழுவதும் அழியலாமா? உன்னிடம் பாசம் கொண்ட பாண்டவரைப் பாதகத்தினால் அழிக்கலாமோ! அண்ணே நீர் கற்ற கல்வி கேள்வியெல்லாம் கடலிற் கரைத்த காயத்துக்கு ஒப்பாமே - கடலிற் கரைத்த பெருங்காயம்போல பயனற்றதாகிவிட்டதே!

## அநுஜா

நாங்கள் எங்கள் வீட்டில் பாம்பைப் பிள்ளையாக வளர்த்துவிட்டோம். இங்குள்ள நரிகளை விற்றுவிட்டு (விலக்கிவிட்டு) புலிகளை வாங்குவாய். ஆந்தை, காகங்களை அகற்றிவிட்டு மயில்களை வாங்குவாய். இங்கு நடக்கும் கேட்டைப் பார்த்து மகிழாதே. உனக்குப் பார்ப்பதற்குக் கண் இல்லை. இப்போது கேட்கும் சக்தியையும் இழந்துவிட்டாயோ? இறக்கும் காலம் நெருங்கும் வயதிலுள்ள நீ, தம்பியின் பிள்ளைகளுடைய செல்வத்துக்கு ஆசைப்படுகிறாயா? உன்னை நம்பி, தங்கள் தந்தையாக உன்னை மதிப்பவர்கள். நீங்கள் அவர்களின் செல்வத்துக்கு ஆசைப்படுவதை அறிந்தால் அவர்கள் தானமாக எல்லாவற்றையும் கொடுப்பார்களே. நீ இப்படி அவர்களுக்குத் துரோகம் செய்யலாமோ!" என்பதை விதுரன் சுட்டிக் காட்டுவதுடன், "நீ இப்படிச் செய்தால் கும்பி மாநரகம் என்னும் கொடிய நரகத்தில் எல்லோரும் விழுந்து அழுந்துவீர்கள்" என்றும் கூறுகிறார்.

“குருகுலத் தலைவன் சபையினிலே வெற்றி வீரம் மிக்க துரோணர், கிருபாசாரியார், அறிவாற்றல் நிரம்பிய பீஷ்மர், பேதையாகிய எனக்கும் எவ்வித மதிப்பும் அற்றுப்போக சகுனி சொல்வதே மந்திரம் போல எல்லோரும் ஏற்றுச் சூதாட்டம் தொடர்வது நன்றோ? சகுனி எங்களுடன் சமமாக இருக்கத் தகுந்தவனோ? அவனை மலைக்கு அனுப்பிவிடு அண்ணே! நன்னெறியிலிருந்து விலகிய பின்பு இன்பம் கிடைக்குமே என்று எண்ணவேண்டாம். அறிவிழந்த சகுனியின் இந்தச் சூதாட்டம் புண்ணியவான்களைப் பகைவர்களாக மாறச்செய்யும். சிறுமைத்தனமானவர்கள் பாதகர்கள் என்று உலகெமெல்லாம் சொல்லி, சீ! இவர்களெல்லாம் மனிதர்களா என்று கேவலமாகப் பேசும்போது, நீ மகிழ்வாக ஆட்சி நடத்தும் கீழான வாழ்வை விரும்புவாயோ?” என்று பலவிதமாக அறிவுரை சொல்லி, சூதால் வரவிருக்கும் தீமைகளை எடுத்துரைத்து, “நீ நன்றாக வாழவேண்டும் என்றால் இந்தச் சூதை இத்துடன் நிறுத்து!” என்று அண்ணன் திருதராட்டிரனை விதுரன் மிகுந்த ஆதங்கத்துடன் கேட்கிறார்.

அறநெறியை நன்கு உணர்ந்தவரும் நாட்டையும் தம் குலத்தையும் பேணிக் காக்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டவருமாகிய விதுரனின் மேலான வார்த்தைகளைக் கேட்டு நன்னெறி அறியாத கொடூர நெஞ்சுள்ள துரியோதனன் கொதித்தெழுந்தான். சினம் தலைக்கேற கண்கள் இரண்டும் நெருப்புக் கொட்டுவதுபோலப் பொறிபறக்க மூளை சிந்திக்கும் சக்தியை இழந்துவிட யாரைப் பாரத்துச் சொல்கிறோம் என்று எண்ணாமல் சிறியதகப்பன் விதுரன் சொன்ன அறிவுரைகளின் நன்மையை உணராமல் அவரைத் திட்டத்தொடங்குகிறான். இதனைப் பாரதியார் “நெறியுரைத்தவர் மேலவர் வார்த்தையை நீசரானவர் கொள்வதுண்டோ!” என்கிறார்.

நன்றி கெட்ட விதுரா சிறிதும் நாணமற்ற விதுரா
தின்ற உப்பினுக்கே - நாசம் தேடுகின்ற விதுரா!
அன்றுதொட்டு நீயும் - எங்கள் அழிவு நாடுகின்றாய்!
மன்றில் உன்னை வைத்தான் - எந்தை மதியை என்னுரைப்பேன்!

எங்கள் வீட்டில் உண்ட உணவுக்குக்கூட நன்றியில்லாமல் இருக்கிறாய். அன்றுமுதல் நீ எங்களை அழிப்பதிலேயே கருத்தாய் இருக்கிறாய். உன்னை அரசவையில் வைத்திருக்கும் என் தந்தையின் அறிவை எப்படிச் சொல்வேன்? உனது மனது பாண்டவருக்கு, ஆனால் உன் வயிற்றை எங்கள் அரண்மனையில் விட்டிருக்கிறாய். கடவுள் உன்னை அப்படிப் படைத்திருக்கிறார். உண்மை நெறியைக் காட்டுபவன் போலவும் உலக நீதியெல்லாம் அறிந்தவன் போலவும் பாண்டவர் சார்பாக இருந்துகொண்டு எங்களுக்கு அழிவைத் தேடுகின்றாய். மன்னர்கள் சூழ்ந்திருக்கும் இந்த அரசசபையிலே நாங்கள் எதிரிகளுடன் முறையாகப் பணயம் வைத்துச் சூதாடி வெல்கிறோம். இதில் நீ என்ன குற்றம் கண்டாய்? நாங்கள் களவு எடுக்கிறோமா, அல்லது புன்னகை செய்து ஏமாற்றுகிறோமா? பொய் சொல்லித் தம் புகழ் பாடி வாழும் மக்கள் உலகத்தில் உள்ளனர். செய்யத் தகாதன செய்வோரும் பலர் உள்ளனர். அப்படித் தவறாக நடப்பவர்களை திருத்த எண்ணி ஐயா! நீ இந்தச் சபையில் எழுந்துநின்றால் அறிஞர்கள் அவலப்பட மாட்டார்களோ!” என தன்னை அறிவாளி மாதிரி எண்ணிக்கொண்டு துரியோதனன் விதுரனை எடுத்தெறிந்து பேசுகிறான். மேலும், “அன்பில்லாத மனைவிக்கு கணவன் எத்தனை ஆயிரம் நன்மை செய்து அவளை மகிழ்விக்க முயன்றாலும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவள் விட்டு விலகிச் சென்றுவிடுவாள். அதுபோலவே உன்னை அரண்மனையில் நாங்கள் நன்றாகப் பார்த்துக்கொள்கிறோம் ஆனால் நாம் எது செய்தாலும் எங்களுக்கு அழிவு செய்யவேண்டும் என்பதே உன் எண்ணமாக இருக்கிறது” என்று விதுரன் மீது குற்றம் சாட்டி, கெடு குடி சொற்கேளாது என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறான் துரியோதனன்.

# தமிழர் சைவப் பாரம்பரியமும் விஞ்ஞானமும்

வைத்திய கலாநிதி கயிலைமணி திருமதி இரத்தினராசா

**கோயில் விக்கிரகத்துக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வது பயனற்ற செயலா?**

அபிஷேகம் என்றாலே எமக்கு நினைவில் வருவது பால், தயிர், மஞ்சள் நீர், தேன், இளநீர், இன்னும் பலவுடன் பஞ்சாமிர்தமுந்தான்.

இவை வீணாக்கப்படுகின்றனவா? இது பலரும் கேட்கும் கேள்வி.

"தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்றார் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. அப்படித் தலை நிமிர்ந்து நிற்கும் தமிழன் காரணம் இல்லாமல் எதையும் செய்யான், விளக்கமில்லாமல் எதையும் பின்பற்றமாட்டான் என்பதை நாம் முதலில் புரியவேண்டும்.

விளக்கமில்லை; அல்லது ஒன்று புரியவில்லை என்பதனால்தான் பிரசினையே வருகின்றது. தவறு பாரம்பரிய பழக்கத்தில் அல்ல.

ஒரு தெய்வச் சிலைக்கு அபிஷேகம் செய்யும்போது, குறிப்பாகக் கருங்கல்லால் ஆன கருமை நிறமான சிவலிங்கத்துக்கு மேல் சொரியப்படும் பதார்த்தமானது அந்தச் சிலையிலிருந்து வடியத் தொடங்கும். இதை அடியார்கள் பார்ப்பார்கள். அப்படி அவர்கள் பார்க்கும்போது அவர்கள் அறியாமலே அவர்களின் கண்கள் மேலிருந்து கீழாக அசையும். அபிஷேகத்தில் பலவகையான மாறுபட்ட திரவியங்கள் பயன்படுத்தப்படுவதால் அவை வடிந்தோடும் விதமும் மாறுபடும். அதற்கேற்பக் கண்ணசைவும் மாறுபடும்.

கண்கள் மூளையுடன் தொடர்பான உறுப்புக்கள். அதனால், கண்கள் அசைய அசைய, மூளையின் முக்கிய மையங்கள் தூண்டப்படுகின்றன. (உதாரணமாக, மனதுக்குப் பிடித்த காட்சிகள் வரும்போது மகிழ்ந்து ஆர்ப்பரிப்பதும், பிடிக்காதவை வரும்போது மயங்கி வீழ்வதையும் உணர்ச்சி வயப்பட்டு வாந்தி எடுப்பதையும் பார்க்கிறோம் அல்லவா?)

அபிஷேகம் பார்ப்பவர்களின் கண்கள் மூளையில் சந்தோஷம் கொடுக்கும் மையத்தைத் (Happiness centre) தூண்டுவதாக ஆராய்ச்சிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரவச நிலைக்கு, அமைதிக்கு மனதை எடுத்துச் செல்லும். பரவச நிலை பெற, சிலர் போதைப் பொருள்களைப் பயன்படுத்துவார்கள். அதனால் ஆபத்தும் உண்டு. ஆனால் இங்கே அதற்கு இடமில்லை.

மன அழுத்தம் இன்றைய சூழலில் இளையோர் முதியோர் என்ற பாகுபாடின்றி எல்லோரையும் பாதிக்கின்றது. அதனால், குடும்பமாகக் கோயில் சென்று அபிஷேக தரிசனம்செய்வது சாலச்சிறந்தது. நமது முன்னோருக்கு இந்தச் சூக்குமம் அப்போதே தெரிந்திருக்கிறது. ஆனால் அவர்களுக்கு என்ன காரணத்தால் அது நிக்ழ்கிறது என்பது புரியவில்லை.

நான், சிறுவயதில், கோயிலில் அபிஷேகம் பார்க்கவென்றே ஒரு கூட்டம் வருவதைப் பார்த்ததுண்டு. அங்கே வரும் மூதாட்டிகள் எம்மையும், "பாலபிஷேகம் பார்!, பார்! " என்று ஊக்குவிப்பார்கள். அந்தக் காலத்தில், "கோயிலில் அபிஷேகம் மட்டும் பார்த்தால் போதும், வேறு ஒன்றுமே பார்க்கவேண்டியதில்லை" என்றொரு மூதாட்டி கூறுவார். எவ்வளவு ஆழமான அறிவுரை அது!



எமது மூதாதையர்கள், முனிவர்கள், ஞானிகள், சித்தர்களின் அறிவுரைகளைக் கேட்டு சிரமேற்கொண்டு நடந்ததால் பயனடைந்தார்கள். இன்றைய தலை முறையினரோ, புதுமை செய்கிறோம், மூட நம்பிக்கை என்று ஏதேதோ சொல்லி உண்மைகளை உணராமல் மேலோட்டமாக பலவற்றைச் செய்கிறார்கள். போதாததற்கு இவற்றை நிறுத்தவும் முயலுகிறார்கள். இந்தப் புரட்சி நமது சமயத்தில் மலிந்துவிட்டது; வருந்தவேண்டிய ஒன்றாகிவிட்டது.

ஒரு கலாசார பாரம்பரியம் மக்களுக்குத் தீங்கு இழைக்காதவரை அதன் நன்மைகளை உண்மையான தாற்பரியங்களை நாம் அறியும்வரை அவற்றைக் கைவிடாமற் தொடர்வது நமது கடமையாகும்.

என் கணவரும் நானும் லண்டனில் புகழ்பெற்ற ஸ்ரீமுருகன் கோயிலில் அபிஷேகப்பிரியரான சிவனுக்கு நடந்த பாலபிஷேகம் பார்க்கும் பாக்கியம் பெற்றோம். அந்த அபிஷேகத்தின்போது சிவாசாரியார் மஞ்சள் நீரால் அபிஷேகம் செய்தபோது வடிந்த நீர், ஒரு வரைபடம்போல அழகாக "Z" வடிவில் ஓடுவதைக் கண்டேன். அந்த நேரத்தில் நானடைந்த ஆனந்தம் அளவற்றது. கிட்டத்தட்ட நாலாண்டுகளின் பின்பும் அந்தக் காட்சி என்னை ஆட்கொள்கின்றது என்றால், அதன் மகத்துவத்தை என்னென்பேன்.

மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்வர்கள் குடும்ப மருத்துவரை உதவிக்கு நாடுகிறார்கள். அவர்களின் பாதிப்புத் தன்மைக்கேற்ப அவசரசிகிச்சைக் பிரிவுக்குச் சென்று மனநோய் மருத்துவரையும் பார்க்கலாம். ஆனால், கோயில்களில் அபிஷேக தரிசனம் செய்பவர்களுக்கு மன அழுத்தம் வருவது குறைவு. அதனுடன் இறை நம்பிக்கையும் இருந்தால் நமது முயற்சியும் சேர, வாழ்க்கையில் வெற்றிதான் என்பதில் ஐயம் இல்லை. மன அழுத்தத்தைக் குறைக்க வேண்டுமானால், இறை நம்பிக்கை அற்றவர்கள்கூடக் கோயிலுக்கு வந்து பயன் பெறலாம்.

நாம் அபிஷேகம் செய்யும் திரவியங்கள் வீணாக நிலத்தில் ஓடுவதாகக் கவலை கொள்ளவேண்டாம். பல சிற்றுயிர்களுக்கு அவை உணவாகின்றன. அபிஷேகத்தைப் பெறும் தெய்வத் திருவுருவும் கால ஓட்டத்தால் வரும் தேய்மானத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறது.

எமது கோயில்களில் நல்ல சிவாசாரியர்கள் மக்களுக்காகச் செய்யும் நற்பணிகளின் மகிமை தெரியாமல் கோயில்களையும் அதைச் சார்ந்தவர்களையும் மனம் நோகச்செய்வது நியாயமற்றது.

மன அழுத்தத்திலிருந்து விடுபட, நலம் பெற ஒழுங்காக ஆலயம் சென்று அபிஷேக தரிசனம் கண்டு உய்வேமாக.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

# திருக்கார்த்திகை விரதம்

முருகப் பெருமானுக்கும் கார்த்திகைக்கும் என்ன தொடர்பு?. கார்த்திகை நட்சத்திரத்தன்று பூரணை கூடுவதால் கார்த்திகை மாதம் எனப்பட்டது. கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரம் திருக்கார்த்திகை எனக் கொள்ளப்படும். சூரபத்மனின் கொடுமைகளைத் தாங்கமுடியாத தேவர்கள் தம்மைக் காக்குமாறு சிவனை வேண்டி நின்றனர்.

சூரனும் சிவ பக்தன். கடுந்தவம் இருந்து பல வரங்களை இறைவனிடம் இருந்து பெற்றவன். தாமே வரம் கொடுத்த படியால் தாமே அவனைக் கொல்லுவது முறையல்ல என உணர்ந்து ஒரு குழந்தையைப் படைத்து அவர்களின் குறைகளைத் தீர்க்க சிவன் முடிவெடுத்தார்.

**திருமுருக அவதாரம்**

இறைவனின் ஆறு முகங்களின் நெற்றிக் கண்களிலுமிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்ற அவற்றை வாயுவும் அக்கினியும் சுமந்து சென்று கங்கையில் சேர்த்தனர். கங்காதேவி அப் பொறிகளைச் சரவணப் பொய்கையில் சேர்த்தனள். பொய்கையை அடைந்ததும் அவை ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்ட தெய்வக் குழந்தை வடிவம் பெற்றன. காத்தல் தெய்வமான திருமால் கார்த்திகைப் பெண்கள் அறுவரை அழைத்து அவர்களைப் பாலூட்டி வளர்க்க பணித்தார். குழந்தை கார்த்திகைப் பெண்களின் அரவணைப்பில் வளர்ந்தது.

திருமதி செ. வனிதா

*கார்த்திகை ஏன் முக்கியமாகிறது?*

அத்திரி, காசிபர், கௌதமர், பரத்துவாசர், விசுவமித்திரர், சமதக்கினி எனும் ஆறு முனிவர்களையும் தேவிமாரையும் கூட்டாகக் குறிக்கும் சொல் கார்த்திகை என்பதாகும். அத்துடன் கார்த்திகைப் பெண்கள் பெருமானை வளர்த்ததால் கார்த்திகேயன் எனும் பெயர் முருகனுக்கு உண்டு.

நாரதர் அரிச்சந்திரன் அந்திமான் சந்திமான் ஆகியோர் கார்த்திகை விரதம் இருந்து பல சித்திகளைப் பெற்றனர். திருஞானசம்பந்தப் பெருமான் கார்த்திகைத் திருநாளைப் பின்வருமாறு பாடுகின்றார்

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்

என்பது அவரது தேவாரம். கார்த்திகைத் திங்கள் கூதிர் காலமாகையால் கதிர் ஒளிகாணாது மக்கள் வீடுகளிலே ஒடுங்கி இருந்தனர். மலைகளில் ஒளியைக் காணாமல் மலை உச்சிகளில்

விளக்கிட்டு மகிழ்ந்தனர். திருவண்ணாமலை உச்சியில் அண்டாவில் நெய் ஊற்றி வெள்ளைத் துணி வைத்து, பஞ்சமூர்த்திகளை எழுந்தருளப் பெற்று தீபத்தை ஏற்றுவார்கள். எரியும் காட்சி 80 மைல் சுற்றாடலில் உள்ளவர்களுக்கு தெரிவதாகக் கூறுவர். இந்த நாளில் சிவபெருமான் திரிபுரம் எரித்த விழா கோயில்களில் கொண்டாடப் படுகின்றது.

கார்த்திகை மாதம் முழவதும் மாலையில் தீபம் ஏற்று விழாவாகக் கொண்டாடுவர். பனைமரத்தை வெட்டி, பனை மடலை வெட்டி, கொழுத்துவதால் சொக்கப் பனை என்னும் பெயர் வந்தது. உடம்பே வீடு, உள்ளம் அகளி, உணர்வே நெய், உயிரே திரி, ஞானமே சிவம். சிவ பிரகாசத்தில் சிவஞான பொருளாகக் காணலாம். மனிதனுக்கும் கடவுளுக்கும் இடையில் தூதனாக அக்கினி கருதப்படுகிறது. குத்து விளக்கில் ஐந்து முகங்கள் உண்டு. அவை அன்பு, மன உறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை என்பவை. மணமான பெண்களுக்குக் கொடுக்கப்படும் சீர்வரிசைகளில் குத்துவிளக்கு முதலிடம் பெறுகிறது.

உடம்பெனு மனைய கத்து உள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய் யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே

என்பது அப்பர் வாக்கு. விளக்கு இருளை விலக்கிப் பொருள்களை விளக்குவதால் காரணப்பெயராகும். கனல் கடவுள் போல எங்கும் நிறைந்தது. கனல் இல்லையெனில் கடல் ஆவி இல்லை. கடல் ஆவி இல்லையெனில் மழையில்லை. மழையின்றி உயிர் இல்லை. இதை விளக்க வந்ததே விளக்கீடாகும். அகல், நெய், திரி, தீ என்னும் நான்கும் தீபம் ஏற்ற வேண்டியவைகள்.

"சோதி அந்தம் ஆயினும் சோதியுள் ஒரு சோதியானும்" - சம்பந்தர்

"தூண்டா விளக்கின் நற்சோதீ
தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்" - சுந்தரர்

"சுத்த நிர்க்குணமான பர தெய்வமே
பரஞ்சோதியே சுகவாரியே" - தாயுமானவர்

அருள் விளக்கே, அருட் சுடரே, அருட்சோதி சிவமே
அருளமுதே அருள் நிறைவே அருள் வடிவப்பொருளே
இருள் கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என்னறிவே என்னுயிரே எனக்கினிய உறவே! - இராமலிங்க சுவாமிகள்

இறைவன் ஆணவ இருளை அகற்றி தன் மயமாக்குவான். அகல், எண்ணெய், திரி ஒன்று பல தீபங்களாக விளங்குவது போலச் சிவனும் அருவமாகவும் உருவமாகவும் மிளிர்கிறார். பழந்தமிழ் மக்கள் அக்கினிப் பிழம்பான சூரியனைப் பெரிதும் போற்றினர். சிலப்பதிகாரத்திலும் "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்பது சூரிய வழிபாட்டின் வெளிப்பாடாகும். கார்த்திகையின் அதிதேவதை அக்கினியாகும். மேலும் திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரரும் உயிர்கள் யாவும் மகிழும்படி மேருமலையை வலம்வரும் பகலவன் என்கிறார்.

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு கடல்கண்டா அங்கு --- "

**விரதங்கள்**

மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விட்டேனும் சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேடமாக வழிபடுதல் விரதம் என்கிறார் நாவலர் பெருமான்.

கந்தபுராணத்தில் மூன்று முக்கிய விரதங்கள் கூறப்பட்டுள்ளன:

**வெள்ளிக்கிழமை விரதம்**

முசுகுந்தன் என்னும் பெருமன்னன் வசிட்ட முனிவரிடம் முருகப் பெருமானின் விரதங்கள் பற்றிக் கேட்டபோது வெள்ளிக்கிழமை விரதம் பற்றிக் கந்தபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவர் உலகத்தைப் பாதுகாத்தது இவ்விரதமே. கார்த்திகை விரதம் சப்தரிஷி முனிவர்கள் மத்தியில் மேம்பட்டவராக வர விநாயகப் பெருமான் ஆலோசனைப்படி நாரதர் முருகப் பெருமானை 12 வருடங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வழிபட்டுப் பயன்பெற்றார்

**கந்த சஷ்டி விரதம்**

ஐப்பசிமாதத்தில் வரும் பிரதமை தொடக்கம் ஆறு நாள்கள் விரதம் இருந்து அநுட்டித்தால் வேண்டிய பலன் கிடைக்கும். நான்முகன் முனிவர்களுள் உயர்ந்த நிலையை அடைய விரும்பி விநாயகரிடம் சென்று தான் மேன்மையடைய ஒரு நோன்பைக் .கூறுமாறு பணிந்து வேண்டி நின்றார். "நம்முடைய இளையவரான முருகனை வழிபட்டு, கந்த சஷ்டி விரதத்தைப் 12 வருடங்கள் தொடர்ந்து கடைப் பிடித்தால் நினைத்ததை நீ அடைவாய்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி ஐம்புலன்களை அடக்கி நாணற்புல்லில் பகலில் உறக்கமின்றி இருந்து உயர்ந்த நிலையை அடைந்தார் நான்முகன்.

கார்த்திகை விரதம்

வீட்டு விளக்கீடு, சர்வாலய தீபம், குமாராலய தீபம் என மூன்று வகையாக மக்கள் கொண்டாடுவர். இது விரதம் மட்டுமல்ல விழாவாகவும் கொண்டாடப்படுகின்றது. வீடுகளில் அகல் விளக்குகளை வரிசையாக வைத்து மக்கள் கொண்டாடுவர்.

"விளக்கொளியாகிய மின் கொடியாளை
விளக்கொளியாக விளங்கிடு நீயே"

- திருமூலர் திருவாக்கு



# இராசன் வாத்தியார்

- முத்து -

அமுதத் தமிழைக் கற்பிப்பதாலோ என்னவோ இராசன் வாத்தியாருக்கு அன்பு ததும்பும் முகம். கனிவாக, இனிமையுடன் பேசும் இயல்பு. மாணவர்கள் மத்தியில் அவருக்குத் தனியான மதிப்பும் அன்பும் உண்டு. அவரைக் கண்டதுமே மாணவர் அனைவரும், தாயைக் கண்ட குழந்தைகள் போல ஆரவாரமாக வணக்கம் சொல்லி அவரை வரவேற்பார்கள். அவர் வகுப்புக்கு வரவும் 11 மணியடிக்கவும் சரியாக இருக்கும். நேரம் தவறமாட்டார்.

மாணவர்கள்: வணக்கம் சேர்! (வழக்கத்தைவிட இன்று சற்று உரக்கவே மாணவர்கள் வணக்கம் சொன்னார்கள்)

ஆசிரியர்: வணக்கம் என் மாணவ மணிகளே! அமருங்கள். என்ன, இன்று வழக்கத்தைவிட மிக ஆர்வமாகத் தமிழ்படிக்க இருப்பதாகத் தெரிகிறதே!

கண்ணன்: சேர்! போன வகுப்பில் நீங்கள் தமிழ் என்றால் இனிமை என்று அர்த்தம் என நன்றாக விளங்கப்படுத்தினீர்களே!

ராம்: ஒரு பாரதியார் பாடலும் சொல்லி விளங்கப்படுத்தினீர்கள் ஐயா!

ஆசிரியர்: ஆமாம் பிள்ளைகளே! உண்மைதான். உங்கள் ஆரவாரமான வரவேற்பைக் கண்டதும் எனக்கு எல்லாம் மறந்துபோச்சு. மன்னிக்கவேண்டும்.

ராம்: அதற்காக ஆசிரியர் மாணவர்களிடம் மன்னிப்புக் கேட்கலாமோ?

ஆசிரியர்: யார் தவறு செய்தாலும் மன்னிப்புக் கேட்பதுதான் முறை ராம். அதுதான் நல்ல பண்பும். அதுசரி, அந்தப் பாரதியார் பாடல் யாருக்கு நினைவிருக்கிறது, சொல்லுங்கோ.

மாணவர்கள் அனைவரும்: எங்கள் எல்லோருக்குமே மனப்பாடம் சேர். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" என்று பாடுகிறார்கள்.

ஆசிரியர்: (கைகளைத் தட்டிக்கொண்டே) ஆகா! ஆகா! எல்லோருக்குமே ஞாபகமாக இருக்கிறதே! எனக்கு இதைக் கேட்க மிகவும் ஆனந்தமாக இருக்கிறது பிள்ளைகளே!

அமுதா: யாமறிந்த மொழிகளிலே என்று ஏன் பாரதியார் சொல்கிறார்? அவருக்குப் பல மொழிகள் தெரியுமா சேர்?

ஆசிரியர்: கெட்டிக்காரி, அது நல்ல கேள்வி. ஆமாம், அவருக்குத் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், பிரெஞ்சு, ஹிந்தி, தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற பல மொழிகளை

அவர் கற்றறிருந்தார். இந்தியா ஒரு பெரிய நாடு. அங்கு இன்னும் எத்தனையோ மொழிகள் பேசப்படுகின்றன. சரி, போனவாரம் திருக்குறள் படித்தோம். இந்த வாரம் ஔவையார் பாடலொன்று படிப்போமா?

கீதா: நாங்கள் ஆத்திசூடி முன்பே படித்துவிட்டோமே!

ஆசிரியர்: அது எல்லோருக்கும் மனப்பாடந்தானே! (ஆசிரியர் ஒவ்வொருவராகக் கேட்கிறார். சிலருக்கு முழுவதும் பாடம், சிலருக்கு அரைவாசிதான் தெரிகிறது.) கிருஷ்ணா! ஏன் முழுவதும் பாடமாக்கவில்லை?

கிருஷ்ணன்: முழுவதும் மனப்பாடம் செய்தேன் இப்போது கடைசி சில வரிகள் மறந்துபோச்சு சேர். அடுத்தவாரம் முழுவதும் வந்து சொல்வேன். இன்று வகுப்பு முடியுமுன், போனவாரம் முடிக்காத மீதிக்கதையைச் சொல்கிறீர்களா?

ஆசிரியர்: என்ன கிருஷ்ணா! ஆத்திசூடி மறந்துபோச்சு ஆனால், கதையை மட்டும் நல்ல ஞாபகம் வைத்திருக்கிறாய்!

கிருஷ்ணன்: கதையை யாரும் மறக்கமாட்டார்கள் சேர்.

ஆசிரியர்: மெல்லச் சிரித்தபடி அது உண்மைதான் கிருஷ்ணா! ஔவையார் பாடல் படித்து முடியக் கதை சொல்கிறேன்.

அமுதா: நாங்கள் இன்று பள்ளிக்கு வந்ததுமே கதையைப்பற்றித்தான் பேசினோம் சேர்!

ஆசிரியர்: அப்போ, எல்லோரும் கதை கேட்கும் ஆவலில் இருக்கிறீர்கள். அது தப்பில்லை. ஆனால் வகுப்பில் படிக்கும் பாடங்களையும் மறவாது மனத்தில் பதிக்கவேண்டும் பிள்ளைகளே!

மாணவர்கள்: ஓம்! மறக்கமாட்டோம் சேர், அன்று கதை பாதியில் நின்றுவிட்தே! அதுதான்.

ஆசிரியர்: நல்லது, இப்போது பாடத்தைக் கவனிப்போம். ஔவையாரைப் பற்றி நாங்கள் முன்பு படித்ததை நினைவுபடுத்திச் சொல்லுங்கோ! பார்க்கலாம்.

ராம்: ஔவையார் முற்காலத்தில் வாழ்ந்த ஒரு பெண் புலவர்.

கண்ணன்: மிகுந்த தமிழ் அறிவு உடையவர். பாடல்கள் இயற்றுவதில் திறமையானவர். பெரியோர்களும் சிறுவர்களும் படித்துப் பயன்பெறத்தக்க வகையில் நல்ல பாடல்களை எழுதியுள்ளார்.

ஆசிரியர்: கெட்டிக்காரன் கண்ணா! அவர் எழுதிய பாடல்கள் என்னவென்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

அமுதா: அவர் ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்று பாடல்கள் பாடியுள்ளதாக முன்பு படித்திருக்கிறோம் சேர்.

கிருஷ்ணன்: அவையெல்லாம் நீதி நூல்கள். மக்களுக்கு நல்ல அறிவைச் சொல்கின்றன.

ஆசிரியர்: அவற்றைக் கற்பதால் என்ன பயன் எங்களுக்குக் கிடைக்கும்? பிள்ளைகளே!

ராம்: நாங்கள் அவற்றைப் படிப்பதால் நல்ல அறிவுள்ளவர்களாக வளரலாம், அவற்றைப் பின்பற்றி (follow பண்ணி) வாழ்ந்தால் நல்லவர்களாக வரலாம்.

கீதா: அப்போ நாங்களும் ஔவையார்போல புலவர்களாக வரலாம், பாடல்கள் எழுதலாமா சேர்?

ஆசிரியர்: ஓ! அது நல்ல எண்ணம்தான் கீதா. ஆனால் அதற்கு இன்னும் எவ்வளவோ புத்தகங்கள் படித்துத் தமிழ் அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

கீதா: அப்படியானால், எத்தனை புத்தகங்கள் படிக்கவேணும்?

ஆசிரியர்: அளவற்ற புத்தகங்கள் கீதா! ஆனால் அவ்வளவும் ஒருவராற் படிக்க இயலாது. முக்கியமான புத்தகங்களைப் படிக்கலாம். எவ்வளவு படிக்கிறோமோ அவ்வளவுக்கு எங்கள் அறிவும் கூடிக்கொண்டே போகும். கற்பனையும் அதிகரிக்கும் அப்போது பாடல்கள் எழுதலாம், கதைகள் எழுதலாம், கட்டுரைகள் எழுதலாம். எதுவும் எழுதலாம். அதனை நன்றாக நீங்கள் புரிந்துகொள்வதற்கு ஒரு திருக்குறள் சொல்கிறேன். கேளுங்கள்.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.”
இது எந்த அதிகாரம் என்று யாருக்காவது தெரியுமா?

கண்ணன்: கல்வி என்னும் அதிகாரத்தில் ஆறாவது குறள் சேர்.

ராம்: குறள் தெரியும் சேர், ஆனால் கருத்துத் தெரியாது.

ஆசிரியர்: சரி, அர்த்தத்தைத் தெரிந்துகொண்டால் இந்தக் குறள் மறக்கமாட்டீர்கள். கேணி என்றால் என்ன என்று யாருக்குத் தெரியும்?

கீதா: நான் பார்த்திருக்கிறேன் சேர்.

ஆசிரியர்: அப்படியா! எங்கே பார்த்தீர் கீதா?

கீதா: நான் போன வருடம் யாழ்ப்பாணம் போனபோது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அம்மா அப்பாவுடன் போனேன். கோயில் பக்கத்தில் ஒரு கேணி இருந்தது.

கிருஷ்ணன்: சேர், அடுத்தவாரம் குறளின் கருத்தைப் படிப்போமா? வகுப்பு முடியமுன் கதையைச் சொல்கிறீர்களா?

மாணவர்கள்: ஓம் சேர்! கதையைச் சொல்லுங்கோ!

ஆசிரியர்: கதையை எங்கே விட்டேன்? விட்ட இடத்தைச் சொல்லுங்கோ!

கண்ணன்: முதலாளி கடைக்குள் ஒரு ஈ காக்கைகூட வரக்கூடாது என்றார். முருகனும் அப்படியே செய்வேன் என்றான். முதலாளி நிம்மதியாக வெளியே போனார். பிறகு சேர்!

ஆசிரியர்: முருகனும் முதலாளி சொன்னதை நன்றாக மனதில் பதித்துக்கொண்டான். கடைக்கு ஈ, காக்கை வருகிறதா என்று மிகக் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது, முதலாளி காலையில் சுவாமி படத்துக்கு முன்னால் பூசைக்கு வைத்த பழங்களின் மீது ஈக்கள் மொய்க்கத் தொடங்கின. அதைக் கண்ட முருகன் ஒரு தடியை எடுத்துக்கொண்டுவந்து கடையின் உள்ளே இருந்த ஈக்களைத் தடியால் துரத்தத் தொடங்கினான். அவை அங்கும் இங்கும் பறக்கத் தொடங்கின. முருகனும் அவற்றை ஓடி ஓடிக் கலைத்தான். கண்ணாடிப் பொருள்கள் பல தட்டுப்பட்டுக் கீழே விழுந்தன; உடைந்தன. அதைக் கவனிக்காது முருகன் ஈயை விரட்டுவதிலேயே முழுக்கவனமும் செலுத்தினான். அந்த நேரம் முதலாளி கந்தசாமி கடைக்குத் திரும்பி வந்தான்.

கந்தசாமி: முருகா! கடைக்கு யாராவது பாத்திரம் வாங்க வந்தார்களா?

முருகன்: இல்லை ஐயா! ஒருவரும் வரவில்லை. ஈக்கள்தான் வந்து சுவாமிப்படங்களுக்கு முன்னால் இருந்த பழங்களில் மொய்த்தன. நான் எல்லாவற்றையும் தடியால் கலைத்துவிட்டேன் என்றான்.

(அப்போது, நிலத்தில் உடைந்திருந்த கண்ணாடித் துண்டொன்று முதலாளி கந்தசாமியின் காலில் குற்றியது. சுற்றிக் கடையை பார்த்த கந்தசாமி அதிர்ச்சியடைந்தார்,)

கந்தசாமி: இதென்னடா! கண்ணாடிப் பாத்திரங்கள் எல்லாம் உடைந்திருக்கின்றனவே! (அப்போதுதான் முருகன் நிலத்தில் உடைந்து கிடந்த பாத்திரங்களைக் கண்டு திடுக்கிட்டான்.)

முருகன்: ஐயா! நீங்கள்தான் ஈ காக்கை ஒன்றும் வராமற் பார்க்கச்சொன்னீர்களே! நான் வந்த ஈயைக் கலைத்தேன். பாத்திரங்கள் விழுந்ததை நான் கவனிக்கவில்லை என்றான்.

முதலாளி: அட முட்டாளே! நான் கள்ளத்தனமாக ஒருவரும் உள்ளே வந்து பொருள்களைத் திருடிவிடக்கூடாது என்பதைத்தான் அப்படிச் சொன்னேன். என்று சொல்லி, முருகன் கையில் வைத்திருந்த தடியை வாங்கி அவனை அடிக்க ஆரம்பித்தார்.

முருகன்: ஐயா! அடிக்காதேங்கோ! நான் தெரியாமற் செய்துவிட்டேன். இனிமேல் கவனமா இருப்பேன் என அழுதான். யாரும் பொருள்களைத் திருடாமல் பார்த்துக்கொள் என்று நீங்கள் சொல்லியிருக்கலாமே

முதலாளி: நீ இவ்வளவு முட்டாளாய் இருப்பாய் என்று நான் நினைக்கவில்லையே! என் புத்தியைச் செருப்பால் அடிக்கவேண்டும். என்று தன் தலையில் அடித்துக்கொண்டார். உன்னை வேலைக்கு வைத்ததால் இலாபத்துக்குப் பதிலாக பெரிய நட்டமே வந்தது. இதை எப்படி நான் சமாளிக்கப்போகிறேன். (முருகன் முதலாளியைப் பார்த்தபடி பரிதாபமாக நின்றான். முதலாளிக்கு அவனைப் பார்க்க இன்னும் கோபம் கூடியது.)

முதலாளி: இன்னும் ஏன் நிற்கிறாய்? உனக்கு இனி வேலையில்லை, போ!

கண்ணன்: பாவம் முருகன் தெரியாமல்தானே பிழை செய்தான்!

கிருஷணன்: முதலாளியும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லியிருக்கலாம். முழுக்க முருகன்மீது பிழை இல்லையே!

ஆசிரியர்: அப்படியனால் யாருடைய பிழை என்று நினைக்கிறீர்கள் பிள்ளைகளே?

அமுதா: முருகன்தான் சரியான முட்டாள். கடையில் வேலைசெய்யும் அளவுக்கு அவனுக்கு அறிவில்லை. அவனை வேலைக்கு அமர்த்திய முதலாளிதான் முட்டாள்.

ஆசிரியர்: ஒருவரை வேலைக்கு வைக்கும்போது அவருக்கு அந்த வேலை சம்பந்தமான அநுபவம் உண்டா என்று முதலாளி முதலில் கேட்டுத் தெரிந்திருக்கவேண்டும். அல்லது போதிய பயிற்சி கொடுத்திருக்கவேண்டும். எனவே முதலாளியின் பிழைதான். இப்போது இந்தக் கதையில் நீங்கள் போனவாரம் படித்த ஒரு திருக்குறளின் கருத்தும் வந்துவிட்டது. அது என்ன என்று அடுத்த வகுப்பில் வந்து சொல்லுங்கள்.

அமுதா: கதையும் முடிய, வகுப்பு முடியும் நேரமும் வந்தவிட்டது சேர்.

ஆசிரியர்: நல்லது, அடுத்த வகுப்பில் சந்திப்போம்.

மாணவர்கள்: அடுத்த வகுப்பில் இன்னுமோர் கதை சொல்வீர்களா?

ஆசிரியர்: நான் படிப்பிப்பதை நினைவில் வைத்துக்கொண்டு பதில் சொன்னால்தான் அடுத்த கதை!

மாணவர்கள்: ஓகே சேர்! வணக்கம்!

> தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு. 396
>
> Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning.

# கேள்வி - பதில்

**இந்து மதத்திற்குள் சைவம், வைணவம் என்ற பிரிவு அவசியமா?**

முதலில் ஆதிகாலத்தில் இருந்தது சைவம் ஒன்றேதான். சைவசமயத்திற்குரிய கடவுள் சிவ பெருமான். அந்தக்கடவுளை எல்லாத் தெய்வங்களும் வழிபடும். இராமேஸ்வரத்தை எடுத்தால். இராமேஸ்வரத்தில் இருப்பவர் சிவபெருமான். சிவபெருமானை வழிபட்டவர் இராமர். சிவபெருமான் வழிபாட்டை ஏற்றுக்கொள்பவர். வழிபாடு செய்பவர் இராமன். அதேபோல திரு வீழிமிழலை, திருமாணிக்குழி போன்ற பல இடங்களில் பல கோயில்களில் மகாவிஷ்ணு சிவபெருமானை வழிபட்டிருக்கிறார். மகாவிஷ்ணுவானவர் சிவபெருமானின் அடியவர்களில் சிறந்தவர். மிக உயர்ந்தவர்.

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருவீழிமிழலையில் சக்கராயுதம் கேட்டு தினமும் 1000 தாமரை மலர்களினால் பூசை செய்தார். ஒருநாள் ஒரு பூவை சாமி மறைத்துவிட்டார். அதற்காகத் தனது கண்ணையே தோண்டி வைத்தார் மகாவிஷ்ணு. அதன் பின் சுவாமி காட்சி கொடுத்து, கண்ணும் கொடுத்து, சக்கராயுதமும் கொடுத்து கண்ணன் என்னும் பெயரும் கொடுத்தார்.

> நீற்றினை நிறையப்பூசி நித்தல் ஆயிரம் பூக்கொண்டு
> ஏற்றுழி ஒருநாள் ஒன்று குறையக்கண் ணிறையவிட்ட
> ஆற்றலுக்கு ஆழி நல்கி அவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
> வீற்றிருந்து அளப்பர் வீழிம் மிழலையுள் விகிர்தனாரே.

என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். மகாவிஷ்ணு பிறப்பு, இறப்பு உடையவர். உயிர்களுக்காக உலக நன்மைக்காக பிறப்பார். அவருடைய அவதாரமே உலகத்திற்கு நன்மை செய்வதற்காக அமையும். இதனால் வழக்காடுவதில் நன்மை இல்லை; எமது சுவாமி பெரிது என்று காட்டுவதற்காக செய்வது அது. அனைவருக்கும் தெரிய வேண்டிய ஒருவிடயம் இங்கே பல கோயில்கள், பிரம்மா பூசித்தது, இந்திரன் பூசித்தது, மகாவிஷ்ணு பூசித்தது, சூரியன் பூசித்தது, அக்கினி பூசித்தது என்றிருக்கின்றன. ஆனால் சிவன் பூசித்தது என்று ஒரு கோயிலும் இங்கே இல்லை. சைவமும் வைணவமும் மோதிக் கொள்வதில் அர்த்தமே இல்லை.

**மனிதர்கள் இறைச்சி சாப்பிடுவது சரியா?**

மனித உணவு வேறு. மிருக உணவு வேறு. மனித உணவு என்பது தாவரம், காய், கனி வர்க்கங்கள். மிருகங்களுக்கு உணவு மிருகம் தான். சிங்கம், புலி, கரடி ஆகியன இறைச்சி தான் சாப்பிடும். அவை காய்கறி வர்க்கங்களான கத்தரிக்காய், வெண்டைக்காய், கரட், பீற்றூட் சாப்பிடாது. உயிர்க்கொலை செய்து, உயிரை நீக்கி உடம்பை சாப்பிடுவது. அது தான் மாமிசம். அதுவும் எம்மைப் போன்ற உடம்புதான்; உயிர் தான். நாம் எப்படி சாகக் கூடாது பிழைத்துக்கொள்ள கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோமோ, அதே போல் தான் அதுவும் நினைக்கும். அந்த உயிரைக் கொல்வது பாவமா? புண்ணியமா? உயிரைக் கொல்வது பாவம்; சாப்பிடுவது அளவில்லாத பாவம்.

ஆம் உயிர் கொல்லார் நல்லோர்
அறிவினை அறிந்த மேலோர்
தீமனம் அடக்க வல்லார்
இவர்களே தேவராவார்
காமராய் கற்பழித்தோர்
களவுசெய் துடல் வளர்த்தோர்
மாமிசம் உண்போரெல்லாம்
மானிடப் புலையர் தானே!

எவ்வுயிரும் பராபரன்சந் நிதியதாகும்.
இலங்கு உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில்
எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணியுள்ளே
இரங்காது கொன்றறுந்து இழிநோய் வந்து
வவ்வியம தூதரும் தண்டம் செய்து
வல்லிரும்பை உருக்கி அவர் வாயில் வார்த்து
வெவ்விய தீ எழுநரகில் வீழ்த்தி மாறா
வேதனைகள் செய்திடும் என்று ஓது நூலே!

அதனால் மாமிசம் உண்போருக்கு இங்கேயும் தண்டனை உண்டு. அங்கேயும் தண்டனை உண்டு. மாமிசம் உண்பது போல் பாவம் கிடையாது. அதுமட்டுமன்றி அது ஒரு அநாகரிக உணவு. அதனால்தான் திருவள்ளுவர்,

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று

என்றார். நெய் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்வதை விட ஒரு உயிரைக் கொன்று தின்னாது இருப்பது பெரிய தவம் என்கிறார்.

கொல்லான் புலால் மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்

அதனால் மாமிசம் சாப்பிட்டால் கட்டாயம் நரகம் தான் போவர். மாமிசம் என்பது உணவு அல்ல, இறைச்சி; பிராணிகள் சாப்பிடுவது. புலி பசித்தாலும் புல்லை உண்ணுமா? என்பது பழமொழி. புலி பசித்தால் இன்னுமொரு பிராணியை அடித்துச் சாப்பிடும். மனிதனுக்கு எத்தனைவிதமான உயர்ந்த உணவுகளைப் படைத்திருக்கிறான் கடவுள். அதையெல்லாம் விட்டுவிட்டு நாம் மாமிசம் சாப்பிட வேண்டுமா?

பக்கத்து வீட்டில் ஒருவர் இறந்து விட்டால் அவர் உடலை அடக்கம் செய்யும் வரை எதுவும் உண்ணக்கூடாது என்று இருப்பர். ஆனால் ஒரு பிணத்தையே பாத்திரத்தில் போட்டு சாப்பிடுவது என்பது முறையா?

பிணங்கிடக்க நான் நுகரேன் என்று நீபேசும்
குணங்கிடக்க வேண்டியதென் கூறாய் - பிணத்தைக்
கலத்திலே இட்டுக் கலந்து நாவாற
புலத்தினாய் தின்றாய் போ

ஒரு பெரிய பரமஞானி இருந்தார். எந்தப்பாவமும் செய்ய மாட்டார். எந்த ஆசாபாசங்களிற்கும் இடமில்லாதவர். சிவசிவா என்று சொல்லிக் கொண்டிருப்பார். உணவு கிடைத்தால் உண்பார். இல்லை எனில் இருப்பார். அவர் நூறு வயதுவரை வாழ்ந்தவர். அவருக்கு முடிவு காலம் வந்தது. அவரை எம தூதர்கள் கொண்டு போய் நரகத்தில் நிறுத்தினார்கள். அப்போது அந்த ஞானி, நான் சிவசிவா என்று சொல்வதைவிட ஒரு பாவமும் செய்யவில்லையே? என்னை ஏன் நரகத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறீர்கள்? என்று கேட்டார்.அதற்கு இயமதூதர்கள், நீங்கள் ஒரு பாவமும் செய்யவில்லைத்தான். ஆனால் நீங்கள் ஒரு நாள் தெரு வழியே போகும் போது ஒருவன் ஆட்டை அறுக்கப்போனான். அப்போது அந்த ஆடு "மே" என்று கத்தியது. அந்தச் சத்தத்தைக் கேட்டுக் கொண்டு போனீர்கள். அந்தச் சத்தத்தைக் கேட்டதற்காக நரகத்தில் நீங்கள் கொஞ்ச நேரம் இருக்க வேண்டும் என்றார்கள். அதற்கு அவர், அலறல் சத்தத்தைக் கேட்டவர்க்கு நரகம் எனில் சாப்பிட்டவர் எங்கே போவது? என்று கேட்டார்.

அம்மா என அலற ஆருயிரைக் கொன்றதென்று
இம்மானிட ரெல்லாம் இன்புற்றி ருக்கின்றார்
அம்மா எனுஞ்சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நரகம்எனில் புசித்தவர்க்கு என் சொல்லுவதே!

என்பது பிரமோத்திரகாண்டம் எனும் ஒரு நூல். அதனால் மாமிசம் உண்பது போல் பாவம், அநாகரிகம். வேறொன்றுமில்லை மாமிசம் உண்பதால் செய்யும் வழிபாடு தானம் தவம் எல்லாம் வீணாய்ப்போகும்.

கங்கையில் பணிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல் போல் கோடிதானம் வள்ளலாய்ச் சொரிந்திட்டாலும்
சங்கை அறவேன்என்று சாத்திரம் உணர்ந்திட்டாலும்
புங்குறு புலால் உண்போர் போய் நரகு அடைவார் திண்ணம்.

அதனால் மாமிசம் சாப்பிடுவது மகாபாவம். அநாகரிக உணவு அது.

**பிற உயிர்களைக் கொடூரமாகக் கொன்று தின்னும் மிருகங்களை இறைவன் ஏன் படைக்கிறான்?**

உயிர்கள் பாவ புண்ணியத்திற்கு தகுந்தாற்போல் ஜென்மம் கிடைக்கும். அது தேவர், மனிதர், நரகர், தாவரம், விலங்கு, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன என எழுவகைப் பிறப்புகள். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி....... " என்பது திருவாசகம். ஆகையால் பாவத்திற்கு தகுந்தாற்போல பிறவி, அதாவது ஜென்மம் கிடைக்கும். பாவம் செய்த உயிர்கள் என்ன செய்யும் என்றால் அதன் கன்மத்துக்குத் தகுந்தாற்போல் பிறவி எடுத்து, இன்னொரு காலத்திற்கு பின் மனித பிறவி எடுக்கும். அதனால் வினைக்குத் தகுந்தாற்போல பிறப்பு. பிறப்புக்குத் தகுந்தாற்போல் உணவு. அப்படி ஏன் படைத்தார் என்றால் அந்த வினைகளை அவை அனுபவித்துத் தீர்ப்பதற்காக என்று கொள்ளவேண்டும்.

- குளித்தலை இராமலிங்கம் அவர்களின் உரையிலிருந்து...

# Manickavachagar

In Tiruvadavur in the Pandya kingdom ther lived a pious Brahmin. He and his dutiful wife, due to merit earned in past lives, got a worthy son whom they named Vadavurar, after the native place.

As the child grew, his wisdom increased as well. Soon he has mastered all the scriptures. He also shone as the embodiment of all virtues and won the love and esteem of all. Even learned Pundits and saints were attracted by his personality and wisdom. The King of Madura, Arimardana Pandyan, heard of Vadavurar's qualities and discovered that he was an all-rounder and was proficient in administration also. The King made him his Prime Minister. Even here Vadavurar shone with extraordinary brilliance and won the title of Tennavan Paramarayar.

As days passed, however, dispassion grew in Vadavurar's heart. He had realised the unreality of the world. To him everything was painful: birth, disease, death, rebirth etc. He wanted to enjoy the eternal bliss of Sivanandam. Even while he was administering the affairs of the state, his mind was fixed on the Lotus Feet of the Lord. He would invite learned men and discuss with them the intricate points in the Vedas. Soon, he realised that a Guru was necessary for real spiritual progress. He longed to meet the real Guru. Whenever he went out on duty, he also searched for his Guru.

One day, while the King was holding his Court, the head of his cavalry entered and informed him that the cavalry needed immediate replenishment, as age, death and sickness had greatly depleted its strength. The king immediately ordered the purchase of good horses. The task of buying good horses from the right place was entrusted on Vadavurar. He was extremely happy, as he was sure that he would find his real Guru, during that tour. It was a God-sent opportunity for him. He offered sincere prayer to Lord Somasundarar in His temple and, besmearing His holy ash on his body with His name on his lips. Vadavurar started on the errand of buying horses, with enough money. He reached Tiru Perunturai.

Lord Siva, who is the Indweller of all hearts and so knew Vadavurar's mental condition, had decided to take him to the divine fold. In the guise of a Brahmin and with a copy of the book ***Siva Jnana Bodam*** in his hand, the Brahmin was seated under a ***Kurunta*** tree near the temple at Tiru Perunturai. He was surrounded by others (the celestial servants in disguise). Vadavurar entered the temple and stood motionless before the Lord, in intense prayer. He shed tears of God-love. Then he went round the temple. Near the tree, he heard the holy vibrations of the Lord's Name (Hara Hara) which melted his heart. The Brahmin's magnetic personality attracted him. With overflowing love and devotion, Vadavurar's ran to the Brahmin, as a calf to its mother, after a long separation: and he fell at the Brahmin's feet.

By His grace, Vadavurar was able to recognise as his real Guru. holding his feet with his hands Vadavurar prayed: "Oh Lord, kindly accept me as your slave and bless me." The Lord was waiting for this! He cast a graceful glance on Vadavurar. This at once removed all his sins and purified his heart. Then the Lord initiated him into the divine mysteries of Siva Jnana. This very initiation entranced him. He tasted the divine bliss and was self-forgetfully absorbed in it. Then Vadavurar regained his consciousness and again fell at the Guru's feet.

he prayed: "Oh Lord, Who has come to initiate me into the divine mysteries! Oh Lord Who has captivated me with a mere look! Oh Lord Who has melted my mind! Oh Lord Who has made me surrender all wealth, body, mind and soul! Oh my Jewel! Oh Wealth Imperishable! Oh Ocean of Bliss! Oh Nectar of Immortality! Prostrations unto You!" Singing His glories thus, Vadavurar removed all his belongings and offered all at the Feet of the Guru. He had become a Sanyasi. Smearing his body with sacred ashes, fixing his mind on the lotus feet of the Guru, Vadavurar plunged into deep meditation. When he awoke from this meditation, he was filled with an eagerness to sing the glories of the Lord. With love as the string and his nectarine words as the gems, he made a garland and offered it at the Guru's feet. The Lord was highly please with it, and called him ***'Manickavachagar'*** since the hymns sung by him were like gems in wisdom. The lord asked him to stay on at that place and disappeared.

Separation from the Lord and Guru, made Manickavachagarsuffer intense pain and anguish. Soon, he consoled himself and lived in rememberance of the Lord and Guru. The King's servants who had accompanied Vadavurar thought that he had forgotten the mission, and so after waiting for a few days, gently reminded him. Manickavachagar sent them back to the King with the message that the horses would reach Madura within one month. When he heard of what had happened to Vadavarur, the King was angry; but waited patiently for a month.

At Tiruperunturai, Manickavachagar was devoted to the Lord, forgetting the Kingand the mission; and he spent the money he had brought, in the construction of a temple. After waiting for a month, the King sent him an angry note reminding him that one should be as alert in dealing with the King as one would be when dealing with a cobra, and asking him to appear before the King at once. Manickavachagar was upset. he went to the temple. he prayed for the Lord's protection. Moved by his sincere prayer, the Lord appeared in his dream that night in the same form of the Guru who initiated him and said: "Oh noble soul, fear not. i myself will bring the best horses to Madura. You can go in advance. Tell the King that the horses will arrive there on Avani Moolam." The Lord disappeared after placing a costly diamond in his hands.



The next morning, Manickavachagar took leave of the Lord of Perunturai and donning his ministerial robes started for madura. he bowed before the King and gave him the diamond. he explained "Your Majesty, I have already purchased the horses for the entire money I had taken. I was waiting for an auspicious day on which to bring the horses here. 'Avani Moolam' is an auspicious day." The King apologised to him for the rash note he had sent. Manickavachagar built a big stable for the horses.

**Swami Sivananda**

To be continued



# RUBY'S

CATERING

020 8799 7180

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|

திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா

கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்

அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton | THISTLE HOTELS more than just accommodating | Holiday Inn

*உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

WESTERN
Jewellers



வகை வகையான வடிவங்களில்
தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.



# FIRST SRILANKAN JEWELLERY SHOP IN UK

## SPECIALISE IN 22CT GOLD WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY.

**TOOTING BRANCH**
*230 UPPER TOOTING*
*LONDON SW17 7EW*
*TEL : 020 8767 3445*

**WEMBLEY BRANCH**
*5, PLAZA PARADE, 29 - 33 EALLING ROAD,*
*WEMBLEY, MIDDLESEX HAO 4YA*
*TEL : 020 8903 0909*

SILK EMPORIUM

SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIM SAREES

122 UPPER TOOTING ROAD
LONDON SW17 7EN
TEL : 02086721900

OPENING HOURES : MONDAY - SATURDAY (10.30 AM - 6.30PM), SUNDAY (11.30AM - 6.30PM)